Registered No. M. 878.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 3. | 1912ஞு செப்டம்பர்மீ 15உ<br>பரீதாபிஞு ஆவணிமீ 31உ | பகுதி 5 |

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S.
பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2.  தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)


1. ஸ்ரீமாந். தாமோதர கே. மவலாங்கர்—ப. நா. ககக

A Short Sketch of the life of Sriman Damodar K. Mavalankar—By P. Narayana Aiyer.

2. ஸ்ரீ சடகோபர் வைபவம்—மு இராகவன். ககஎ

The Greatness of the saint, Sri Satakopar. By M. Raghaviengar

3. தேகமும் தேகியும்—தி. மீநாக்ஷிசுந்தரம் பிள்ளை. கசகூ

Body and Soul—By T. Meenakshisundaram Pillay.

4. வருஷம்: அதன் உண்மை—ஆர் எஸ். நாராயணஸ்வாமி ஐயர். கருச

Year and its Significance—By R. S. Narayanasamy Aiyar.

5. சைவசமயம்—பொ. முத்தையாபிள்ளை. கருஎ

Saiva Samayam—By P. Muthiah Pillai.

6. பத்திரிகை வரவு—பத்திராதிபர். க௯0

Review of papers—Editor.

7. சமாசாரம்—பத்திராதிபர். க௯0

News—Editor.

8. பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.

Patanjala Yoga Sutra.



விளம்பரம்.

அதிக உன்னதமான உறுதியுள்ள கீர்த்திவகித்த கைக்கெடியாரங்கள், பெரிய கெடியாரங்கள், நம்பிக்கையுள்ள மருந்து, எலக்டிரிக் பொன், ஜெர்மன்சில்வர், இமிடேஷன் இரவை கெம்புகற்களாற் செய்த ஆபரணங்கள், புத்தகங்கள், சுருக்தலா கூந்தல் வளரும் பரிமளத் தைலம், அத்தர், போடோகிராப் படங்கள் இன்னும் அநேக சாமான்கள் அடங்கியதுமான கேட்லாக் தங்களுடைய அட்ரஸ் தெரிவிப்போர்களுக்கு ஒரு கேட்லாக்கு இனாமாக அனுப்பப்படும். எம்முடைய கேட்லாக்கில் விலைகள் கிரம்பவும் நயம்,

T. M. கலியாணசுந்தர முதலியார்,

போடோகிராபர், 32-33, நாகப்பையர் தெரு,

திருவட்டீஸ்வரன் பேட்டை,

மவுண்ட்ரோட், சென்னை.

## ADVERTISEMENT.

## அறிவிப்பு.

### உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், சூத்ரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தசூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. | இப்போதியவிலை. |
|---|---|---|
| | ரூ அ ப | ரூ அ ப |
| ஈசோபநிஷத் | 1—8 —0 | 0—8 —0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் | 4—0 —0 | 1—8 —0 |
| முண்டகம் | 2—8 —0 | 1—0 —0 |
| மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில் | 3—8 —0 | 1—8 —0 |
| தைத்திரீயம் | 6—0 —0 | 2—0 —0 |
| சூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை | 6—12—0 | 2—4 —0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.
ரிடைர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 கிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

## NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy, Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் ஷை | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌனவாக்கு | 0-2-0 |
| சன்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அன்னிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞானிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சன்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞான சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞான சபை | 0-0-1 |
| தாசவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெசிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# பூர்ணசந்திரோதயம்.

| தொகுதி 3. | 1912௵ செப்டம்பர்௴ 15௳<br>பரீதாபி௵ ஆவணி௴ 31௳ | பகுதி 5 |
| --- | --- | --- |

## ஸ்ரீமாந் தாமோதர கே. மவலாங்கர்.

இவர் உயர்தர தியாகி. பிரஹ்மக்ஞாந சபையின் ஆரம்ப காலத்தில் ஜ்வலித்துக்கொண்டிருந்த விவேக சூடாமணிகளில் ஸ்ரீமாந். ஸுப்பராவ், தாமோதர மவலாங்கர் இவ்விருவர் சிரேஷ்டர்களாவர். பிரஹ்மக்ஞாநசபையின் அங்கத்தினர்களுள் இவர்களுடைய திருநாமங்களைக் கேட்காதவரிலர். இவ்விருவர்களில் ஸ்ரீமாந். ஸுப்பராவ் என்பார் மரணமாயினர். அவரைப்பற்றி வேறொரு சமயம சுருக்கமான சரித்திரம் எழுதுவோம். தாமோதர மவலாங்கர் என்பார் இன்னும் பூலோகத்தில் உயிருடனிருக்கின்றார். ஹிமாசலத்தில் மஹாத்மாக்களுடன் வசிக்கின்றார். அவர் பம்பாய் ராஜதாநியில் மஹாராஷ்டிர பிராஹ்மணர் குலத்தில் 1857௵ பிற்பாதியில் ஜநநமானார். பிரஹ்மக்ஞாந சபை சம்பந்தமாய் அவருடைய சரித்திரத்தை இவ்விடத்தெழுத உத்தேசித்திருக்கின்றமையால், குடும்ப விவரங்கள் அதிகமாக இதில் எழுதப்பெறாமல் தவிர்க்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம், மஹாராஷ்ட்ரம், ஸம்ஸ்க்ருதம் இம்மூன்று பாஷைகளிலும் நல்ல பயிற்சியுடையவர். மெல்லிய மாநிறமான சரீரமுடையவர். நீண்ட மூக்கும், பரந்த முகமும், குறுகிய நெற்றியும், வற்றிய கன்னமும், பிரகாசமான கண்களும் உடையவர்.

வாஸிபத்தில் ஜ்வரங்கண்டு ஸ்வல்பகாலம் பிரக்ஞை தப்பியிருந்தார். அந்நிலையில் ஒரு மஹா புருஷனின் காட்சியைக் கண்டார். அம் மஹாபுருஷன் புன்னகை யுள்ளவராய் அவரைக் கடாக்ஷித்து "உன் னைக் காப்பாற்றுகிறேன் பயம் வேண்டாம்" என ஆசீர்வதித்து அபயங்கொடுத்தார். பின்பு தாமோதரருக்குப் பிரக்ஞை வந்தது. காலக்ரமத்தில் ஜ்வரம் நீங்கியது. கண்ட காட்சியின் ஸ்மரணை தம் மநத்தை விட்டகலாமல் தங்கிக்கொண்டிருந்தது.

2. பிரஹ்மக்ஞான ஸபையின் ஸ்தாபகர்களாகிய மாதுஸ்ரீ ஹேலிநாம்பாள் அம்மையாரும் (H. P. B.) ஸ்ரீமாந். ஆல்காட் என் பாரும் 1879-ம் வருஷத்தில் பம்பாய் நகருக்கு வந்தார்கள். அவர்களை அந்த வருஷம் ஆகஸ்டு மீ 3-ம் தேதி ஸ்ரீமாந். தாமோதரர் ஸந்தித்தார். சபையின் உயர்நலமமைந்த லக்ஷ்யங்களையும், நோக்கங்களையும் நன் குணர்ந்து சபையில் தாமும் ஒரு அங்கத்தினராயினர். பின்பு அச் சபையின் கார்யாதிகளை அவ்விருவர்களுடன் ஏகோபித்து சிரத்தா பக்தியுடனே இடையறாமல் வெகு முயற்சியுடன் நடத்திவந்தார். அவர் திடமான சரீரமுடையரல்லராயினும், திரா. ஹேலிநாம்பாள் அம்மையார் வார்த்தைக்கு இரண்டில்லாமல் தாம் ஜ்வரகாலத்தில் காட்சிபெற்ற மஹாத்மாவின் பிரதிநிதியாக அம்மையாரைப் பாவி த்து அவரிடம் பண்பும் பணிவுமுடனேயும், பயபக்தி யுடனேயும், ஒழுகுவாராயினர். ஒரு சமயத்தில் தான் ஜ்வரகாலத்தில் கண்ட மஹாபுருஷன் நேராகவே தரிசநங்கொடுத்தார். அந்த மஹா புரு ஷனே கூட் ஹூமி ( Master K. H. ) என்று சொல்லப்பெறும் மஹாத்மா ஆவர். இந்த தரிசநங் கிடைத்த பிற்பாடு இவர் இந்த மஹாத்மாவின் நேரான சிஷ்யராக அமைந்தார். இவருடைய ஞாநபூமி மென்மேலும் அகன்றது. அநேக சித்திகள் செய்யும் திறமையும் பெற்றார்.

3. குடும்பத்தை முற்றும் துறந்து மஹாத்மாக்களின் கைங் கர்யத்தை நன்றாய் நடத்தவேண்டுமெனக் கருதினர். அவர் பிதா வும் சிற்றப்பனும், பிரஹ்மக்ஞான சபையில் அங்கத்தினர்களாயினர். குடும்பத்தைவிட்டுத் துறவியாக வெளியேறி மாதுஸ்ரீ ஹேலிநாம் பாள் அம்மையாருடனும் ஸ்ரீமாந். ஆல்காட்என்பவருடனும்வசிக்க

அநுமதி கொடுத்தார்கள். பால்யத்திலேயே ஜாதி வழக்கப்படி அவருக்கு விவாஹமாயிருந்தது. ஆனால் அவர் ஸம்ஸாரம் ப்ரௌடையாகாததால், ஸம்ஸாரம் அவரிடம் வரவில்லை. இனி கிருஹஸ்தனாக இருந்து உலக விஷயங்களில் உழன்று ஸம்ஸாரியாக இருப்பதில் வெறுப்புக்கொண்டார். தம்முடைய பாகத்திற்குக் குடும்பசொத்தில் 50,000 ரூ பெறக்கூடிய சொத்தை தம்முடைய பிதாவுக்கே முற்றும் விட்டு ப்ரௌடையாகாத தன்னுடைய பத்நிக்கு இருக்க இடமும் அந்நவஸ்திரமும் கொடுக்கவேண்டும் என்று, பிதாவினிடமிருந்து உறுதிபெற்றார். பிதாவும் மற்ற குடும்பஸ்தர்களும் அந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டார்கள்.

4. பின்பு, மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் முதலியவர்களுடன் லங்கைத் தீவுக்குப் போனார். பௌத்தமத ஸம்பிரதாயத்தை வெளிப்படையாக அநுஷ்டானத்தில் வைத்துக்கொண்டார். இக்காரணத்தால் முன் ஸ்நேஹமாயிருந்த தன் குடும்பஸ்தர்கள் திரும்பவும் கிருஹஸ்த தர்மத்தை வகித்துக்கொண்டு பத்நியுடன் சேர்ந்திருக்க வேண்டுமெனப் பலவாறாக இவரை ஹிம்ஸித்தார்கள். அதற்கு அவர் இணங்கினாரில்லை. பிரஹ்மக்ஞாந சபையில் அங்கத்தினராகச் சேர்ந்த பிதா முதலியவர்கள் இப்போது அதைவிட்டு விலகிக்கொண்டார்கள். இவரையும் சபையையும் தூஷிக்க ஆரம்பித்தார்கள். குடும்பஸ்தர்களால் இவருக்குப் பலவித துன்பங்களும் இடையூறுகளும் சேர்ந்தபோதிலும், அவைகளால் தம் மநம் அற்பமேனும் பிறழாமலும், நோகாமலும், இருந்துவந்தார். பிரஹ்மக்ஞாந சபையின் ஸ்தாபகர்கள் மேலும் தமக்கிருந்த அன்பு வர வர விருத்தியடைந்தது, இன்னும் அதிக தீவ்ரமாய் சபையின் கைங்கர்யங்களை நடத்திவந்தார்.

5. தூரதிருஷ்டி, (Clairvoyance), தூரக்(கேள்வி) சிரவணம் (Clairaudience), என்ற சித்திகளை இவர் அதிகமாகப் பெற்றிருந்தார். இவைகளைப்பற்றி அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு 1885-ம் ஜூலைக் கடைசியில் ஒருநாட்காலையில், தான் இருந்த இடத்திலில்லாமல் சுமார் மூன்றுநாள்வரை வெளியேறிப் போயிருந்தார். இதனால் ஸ்ரீமாந் ஆல்காட் என்பார் அதிக கவலைகொண்டார். அச்சமயம்

ஹெலிநாம்பாள் அம்மையார் வேறூரிலிருந்தார். "ஹிமாசலத்திற்குத் தன்னுடைய குருவைப் பார்க்கப் போயிருக்கிறாரென்றும், சீக்கிரம் திரும்பி வந்துவிடுவாரென்றும், ஹெலிநாம்பாள் அம்மையாரிடமிருந்து தந்தி வந்தமேல் ஸ்ரீமாந். ஆல்காட் கவலையற்றிருந்தார். பின்பு, ஸ்ரீமாந். தாமோதரர் திரும்பிவந்தார். இப்போது சரீரத்திலும், குணநிசயங்களிலும், மனோபாவங்களிலும் அநேக மாற்றங்கள் உண்டாயிருந்தன.

6. 1883, 1884, 1885-ம் ஞு ஆதியாற்றில் பிரஹ்மஞான சபையில் Recording Secretary என்ற உத்தரவாதமான உத்தியோகத்தை வகித்திருந்தார். அக்காலத்தில் 'Theosophist' என்ற பிரஹ்மஞான பத்திரிகையில் அவரால் ஞானவிஷயமான அநேக வியாசங்கள் எழுதப்பட்டு வெளிவந்திருக்கின்றன. அவைகளைப் பார்த்தால் அக்காலத்தில் அவருடைய மனோபாவத்தின் உயர்வும், கல்வியின் விரிவும், ஞானத்தின் முதிர்ச்சியும், இத்தன்மையன என வெளியாகும். அக்காலத்தில் அவரை நேரில் நாம்பார்த்தும், சம்பாஷித்தும் இருக்கிறோம். ஹெலிநாம்பாள் அம்மையார் இந்தியாவை விட்டு சீர்மைக்குப் போன பிற்பாடு ஆதியாற்றிலிருக்கிறதற்குப் பிரியமில்லாதவராய் 1885 ஞு பிப்பிரவரிமீ 23உயில் ஆதியாற்றைவிட்டு விலகி, ஹிமாசலத்தில் வசிக்கின்ற தம்முடைய குருவைப் போய்ச் சேர்ந்தார். அது முதல் இதுவரை 27 ஞு காலமாய்த் தொடர்பாய் இடைவிடாமல் ஹிமாசலவாஸியாக இருந்துகொண்டு பிரக்ஞா பூமியின் பலபடிகளிலேறி ஞானஸம்பந்நராக விளங்கிக்கொண்டிருக்கின்றார். சமீபகாலத்தில் பிரஹ்மஞான சபையின் காரியங்களை நேரில் நடத்த நம் ஊனக்கண்ணால் பார்க்கும்படியாகத் திரும்பி வருவார். அவர் வரவை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இன்று வருவாரோ, நாளை வருவாரோ, மற்றென்று வருவாரோ நாம் அறியோம்.

இப்புண்ணியர் படத்தை இந்தப் பத்திரிகையில் சேர்த்திருக்கிறோம்.

ப. நா.

ஸ்ரீ:

# ஸ்ரீ சடகோபர் வைபவம்

(122-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

ஆழ்வாரை 5000 வருஷத்துக்கு முன்னிறுத்துவதால் அப் பெரியார்க்கு இல்லாத புதுப்பெருமை ஒன்றும் உண்டாய்விட வில்லையே? அன்றி, அவர், 1000 வருஷத்துக்கு முற்பட்டவரே என்று காலத்தை ஆராய்ந்து குறுக்குவதால் உள்ள பெருமைக்கு என்ன குறை நேரக்கூடும்? பிற்காலத்து அவதரித்த உடையவர் (ஸ்ரீ ராமாநுஜர்) தேசிகன், வரவர முனிகள் முதலிய பரமாசாரி யர்க்கெல்லாம் காலம் பிற்பட்டிருத்தலால் சேர்ந்த பெருமைக் குறைவு என்னே? ஆதலால், ஆழ்வார் காலவளவை ஆராய்ந்து கொள்ளும்போது, அது பிற்பட்டதாக ஏற்படுமானால், அதனை நாமும் சோதித்துத் தெளிதல் முறையேயன்றி, கூறினவரிடம் கோபங்காட்டுதல் முறையன்றாம். இனி, இம்முடிபு உண்மை யுடையதாயின், கலிபிறந்த 43-ம் நாள் அவதரித்தவர் ஆழ்வார் என்று முன்னோர் பிரபலமாக வழங்கியதற்குக் காரணம் யாது? என்ற கேள்வி நிகழக்கூடும். இதற்கு அடியில் வரும் சமாதானம் ஏற்றதாமோ என்பது அறிஞர்கள் ஆராய்ந்துகொள்ளத்தக்கது. அதாவது பரதகண்டத்துள்ள பற்பல நாட்டாரும் சகனுடைய அப்தத்தைத் தம் சாஸநங்களிலும் வழக்கிலும் கொண்டு வழங்கி யதுபோலத், தென்பாண்டி நாட்டிலுள்ளவர்கள் பண்டும் இன்றும் விசேஷமாக வழங்கிவரும் அப்தம் "கொல்லமாண்டு" என்பது. இக் கொல்லமாண்டு கி. பி. 825-ல் தொடக்கமானது. இவ்வாண் டின் உற்பத்தி பற்றிச் சரித்திரகாரர் ஒருமுடிவுக்கு வாராமல் பல விதமாக அபிப்பிராயங் கொள்வர். இவ்வாண்டு கலியுகத்தின் சம் பந்தமாக ஒரு காலத்தில் உற்பத்தியாகிக் காலாந்தரத்தில் தனியப்த மாகப் பிரிந்து வழங்கியதென்று கருதும் பக்ஷமும் உண்டு. இனி, இக்கொல்லமாண்டு தொடக்கமான காலத்தில் நம் ஆழ்வார் அவ தரித்தவராயிருந்தமை பற்றி அவ்வாண்டுத் தொடக்கத்தைப் பின் புள்ளோர் 'கலியுகம் பிறந்த சமீபம்' என்று கொண்டு காலவளவை அதிகமாக்கினரோ என்று நாம் சந்தேகிக்கவும் இடந்தருகிறது. எங்ஙனமாயினும், மேற்கூறிய சரித்திர வாராய்ச்சிக்கு இசைய

ஆழ்வார் அவதாரத்துக் கூறப்படும் கலியுக ஆரம்பத்தை இணக்கிக் கொள்ளவேண்டுமாயின், பாண்டிநாட்டின் தென்பாரிசத்தில் பிரபலமாக வழங்கிவரும் கொல்லமாண்டுத் தொடக்கத்தையே இணக்கிக்கொள்வதன்றி வேறு தக்கவழி யிருப்பதாகத் தோற்றவில்லை.

இனி, நம்மாழ்வார் காலத்தே தென்மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்ததென்றும், அச்சங்கம் ஆழ்வார் பாசுரமொன்றால் கர்வபங்கம் அடைந்ததென்றும் குருபரம்பரை கூறுதல் மேலே குறிக்கப்பட்டது. இவ்வாறே, ஆழ்வார் சம்பந்தத்தால் சங்கத்துக்கு ஓரிழுக்கு நேரிட்டதென்னும் செய்தி கம்பநாடர் காலத்தும் பெருவழக்காக இருந்ததென்று தெரிகிறது; இதனை

"சுவடிறக்கத்தொடர் ஆசைக்களின்றைத் தொடர்ந்திரண்டு
கவடிறக்கட்டிய பாசத்தனைக்கண் பரிந்து சங்கக்
குவடிறக் குத்திய மாறப்பெயர்க் கோலியானை நங்காய்
இவடிறத் தோன்றும் படரந்திவான மிருள்கின்றதே"

என்ற சடகோபரந்தாதிப் பாடலால் நன்கு அறியலாம். ஆழ்வார் காலம் 9 அல்லது 10-ம் நூற்றாண்டாயின், மேலே கூறிய மதுரைச் சங்கம் கடைச்சங்கமன்றி வேறு ஒரு சங்கமாதல் வேண்டும். 300 தமிழ்ப்புலவர் அச்சங்கத்திருந்தனர் என்று குருபரம்பரை கூறுவதாலும் அது 49 புலவரையுடைய கடைச்சங்க மாகாமை தெளியப்படுகிறது ஆகின், தென்மதுரையில் தமிழ்ச்சங்கமொன்று பொய்யாமொழிப் புலவரால் ஒருமுறை பாண்டியனுதவிகொண்டு கூட்டப்பட்டதென்பதும், அது அதிககாலம் நீடித்திருக்கவில்லை யென்பதும், அப்புலவர் 9 அல்லது 10-ம் நூற்றாண்டிலிருந்தவர் என்பதும், ஆராய்ச்சியில் அறியப்படுதலால், ஒருகால் அச்சங்கமே ஆழ்வார்காலத்துச் சங்கமாகக் கருத இடமுமுண்டு. பொய்யாமொழியார் சங்கம் கூட்டியதும், அவர்காலமும் யான் "செந்தமிழ்" பத்திரிகையில் எழுதிய அப்புலவர் சரித்திரத்தை நோக்குமிடத்து விசதமாகும். இனி, ஆழ்வார்திருநகரி ஏட்டுப்பிரதிகள் (மதுரைத் தமிழ்ச்சங்கத்துள்ளவை) சிலவற்றில் "சங்கத்தார்க்கு ஆழ்வார் அருளிச்செய்த அகவல்" என்ற தலைப்பின் கீழ் அடியிற்கண்ட அகவலொன்று காணப்படுகிறது. அந்த அடியில் வருவதாம்:—

" அண்ட கோளத்து ஆரணு வாகிப்
பிண்டம் பூத்த பேரெழில் ஒருமை
ஈருயிர் மருங்கி ஞருயிர் தொகுத்து
நித்திலத் தன்ன வெண்மணல் பரப்பி
வேரும் வித்து மின்றித் தானே
தன்வழி யறியாத் தொன்மிகு பெருமரம்
மூவழி முப்பழம் முறைமுறை தருதலின்
ஒன்றுண்டு ஒன்சுவை தருவது மற்றது
கல்லில் எழுந்து கடலில் அழுந்தி
அறுகாற் குரவ னீரற விளக்கும்
நிறைபொழிற் குப்பை தறுகட் பொன்னுமித்து
அறுகோட் டாமா விளக்கு நாடன
அவனே தலையிலி அவன்மகள் முலையிலி
தானும் ஈனுள் ஈனவும் படாஅள்
எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்
அவ ளிவள் உவளென் றறிதல்
துகளறு காட்சிப் புலவரது கடனே "

இதன் (பொருள்) இப்போது நன்கு விளங்கக் கூடவில்லை. இவ்வகவல், சங்கத்தார் கர்வமடக்கவேண்டி, ஆழ்வார் அவர்க்கு அனுப்பியது என்பதற்கு வேறு நூல் ஆதரவு இப்போது கிடைத்திலது.

இனி, ஆழ்வார் பிரபாவத்தைக் காட்ட மற்றோர் அற்புதமும் சொல்லப்படுகின்றது. திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) உள்ள தாமிரபர்ணியாற்றின் வடகரையில் யோகி யொருவர் சிலகாலம் வசித்துவந்தார். அவரால் வளர்க்கப்பட்டு, அவரது பிரியத்துக்குப் பெரிதும் பாத்திரமாயிருந்த நாயொன்று பகற்போதெல்லாம் அந்நதியைத் தாண்டித் தென்கரையிலுள்ள ஸ்ரீவைஷ்ணவ அக்ரஹாரத்தில் திரிந்து அங்குள்ள அடியார் உச்சிஷ்டங்களை புஜித்துவிட்டுப் பொழுதுசாயவும் அக்கரையிலுள்ள யோகிபால் வந்து சேர்வது வழக்கம். இவ்வாறு நிகழ்ந்துவரும் நாளில் ஒரு நாள், அந்த நாய் அக்கரையிலிருந்து மாலையில் திரும்பி வரவில்லை; வராததைக் கண்டு யோகியானவர் அதன் காரணத்தை அறியவேண்டி ஆற்றிற்

குச்சென்று பார்த்தபோது, அந்நாய் வழக்கம்போல வடகரைக்குத் திரும்ப ஆற்றிலிரங்கிப் பாதிநதியைக் கடந்தவளவில் திடீரென்று வெள்ளம்வந்துவிட அதைக்கடக்கத் தம்மால் இயன்றவரை முயன்றும் வெள்ளத்தின் வேகமிகுதியால் முடியாமற்போய்விடவே அது தன்செயலற்று நீருள் அமிழத் தொடங்கியது. அப்போது யோகியானவர் அந்நாயின் நிலைமையைக் கூர்மையாகக் கவனித்தார். நாயோ நீரில் மிதந்து இறக்குந் தறுவாயில் இருந்தது. அப்போது அதன்சிரஹ்கபாலம் வெடித்து ப்ரஹ்மரந்த்ரவழியாக அதன்ஆத்மா ஜோதிவடிவாய் வெளியேறுவதையும், கோடிசூரியப் ப்ரகாசம் போன்ற ஒளி மிகுந்த விமானத்தின்மேல் அது ஆரோகணித்து மேலுலகம நோக்கிச் செல்வதையும் அந்த யோகி கண்ணுற்று வியப்பும் உவப்பு மடைந்து

“வாய்க்குங் குருகை நகர்வீதியெச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபதமளித்தாய் அந்த நாயோடிந்தப்
பேய்க்கு மிடமளித் தாற்பழுதோ, பெருமான்மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிபாடும் ஞானத்தமிழ்க்கடலே”

என்று பாடினார். இந்த யோகி சிவஞ்ஞானியும் திருவிசைப்பா இயற்றியவருள் ஒருவருமான கருவூர்த்தேவர் என்று தெரியவருகிறது. இப்பெரியார் பல அற்புதங்களைச் செய்துகொண்டு திருக்குருகூர் அடைந்து அவ்வூரிலுள்ள நாயும் சுவர்க்கமடையச் செய்தாரென்று இற்றைக்கு 300 ஆண்டுக்கு முற்பட்டதென்று பாயிரத்தால் விளங்கும் கருவூர்ப் புராணத்தில், சரித்திரம் பாடப்பட்டுள்ளது. திருநெல்வேலிப் புராணத்தும் இக்கருவூர்ச் சித்தர் திருக்குருகூராகிய ஆழ்வார் திருநகரி சென்றுவந்த வரலாறு காணலாம். இவ்வாறு, ஒரு நாய், திருநகரியில் ஸ்ரீவைஷ்ணவ உச்சிஷ்டம் உண்ட பிரபாவத்தால் மோக்ஷமடைந்த செய்தி, அவ்வூர்த் தாமிரபர்ணியாற்றின் மத்தியில் கட்டப்பட்ட மண்டபத்துள்ள, கல்தூண் ஒன்றிலும் செதுக்கப்பட்டு, இன்னும் யாவரும் காணக்கூடிய நிலையில் உள்ளதாம்.

இத்தகைய ஆழ்வார் பிரபாவம், தென்னாட்டில் மட்டுமன்றி, விந்தத்தின் வடபாலுள்ள தேசங்களிலும் பரவி, பின்வந்த ஆசாரியர்களால் பிரசித்தப் படுத்தப்பட்டதாம். வங்காள நாட்டில் ஸ்ரீ கண்ணபிரானுடைய புநரவதாரமாகக்கொண்டு பலகோடி ஜனங்கள் இன்னும் வணங்கிவரும் மஹாபக்த சிரோமணியாகிய ஸ்ரீ கிருஷ்ணசைதந்யஸ்வாமிகள் திக்விஜயம் செய்துவருங்காலத்தே ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினரென்றும், அவ்வூரில் திராவிட ப்ரம்ம ஸம்ஹிதையின் (திருவாய்மொழியின்) பிரதியொன்றை விரும்பிப் பெற்றுச் சென்றாரென்றும் Mr. D. N. கங்குலி அவர்களால் எழுதப்பட்ட ஸ்ரீ கௌரங்க சரித்திரம் 45-ம் பக்கத்திற் கூறப்படுதல் காணலாம்.

•

இவ்வாறே, இற்றைக்கு 350 வருஷங்களுக்கு முன்பு, வடதேசத்தில் அவதரித்து பரதகண்டத்தின் வடபாகத்தவர் பெரும்பாலும் வேதம்போல மதித்துக் கொண்டாடும்படி ஸ்ரீமத் ராமாயணத்தை இந்துஸ்தானி பாஷையில் அற்புதமாகவும் உருக்கமாகவும் இயற்றிய மஹாபக்தராகிய துளஸீதாஸரைப் பற்றிக் கேள்விப்படாத தேசத்தவர் யாவர்? இம்மஹான், ஸ்ரீ ராமாநுஜ சித்தாந்தத்தைச் சார்ந்தவரென்றும், இவர் வணங்கிய பூர்வாசாரியரில் ஸ்ரீ சடகோபர் முக்கியமானவரென்றும் வடதேசத்திலேயே குரு பரம்பரை வழங்கிவருமாயின், ஆழ்வார் பிரபாவம் முன்பு எவ்வளவு தூரம் பரவியிருந்ததென்பது விளங்கும். துளஸீதாஸர் தமது பூர்வாசாரியர்களாக வணங்கிவந்த பெரியோர் ஆழ்வார், ஸ்ரீமந்நாதமுநிகள், ஆளவந்தார், ராமாநுஜர், நம்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், திருவாய்மொழிப் பிள்ளை, என்னும் ஸ்ரீ வைஷ்ணவ ஸதாசாரிய பரம்பரையே என்பது, Mr. G. A. Grierson, C. I. E. அவர்களின் (Indian Antiquary Vol. XXII, 1893)-ல் எழுதிய துளஸீதாஸரைப் பற்றிய குறிப்பு நோக்கி உணர்ந்துகொள்க. இன்னும், வடநாட்டாரில் ஸ்ரீ ராமாநுஜ சித்தாந்தத்தை அநுசரிப்பவர், திருவாய்மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களைக் குழந்தைக் குழறியாயினும் அத்யயநம் பண்ணி, ஸம்ப்ரதாய முறையைத் தழுவுபவரா யிருத்தலைக் காணலாம்.

இவ்வளவும், ஸ்ரீ சடகோபர் வைபவம் ஒருவாறு ஆராயப்பட்டது. இனி, அவ்வாழ்வார் அருளிச்செயல் மூலம், அவர் கொள்கைகளையும் அநுபவங்களையும் உபதேசங்களையும் அறிந்தவரையில் கூற முயலுவேன். யானெழுதும் முறை ஸம்ப்ரதாயத்துக்கு ஒத்ததோ ஒவ்வாததோ தெரிந்திலேன். ப்ரபந்நர்கள் க்ஷமித்தருள்க.

நம்மாழ்வார், வேதமும் அதன் உபப் பிராஹ்மணங்களுமே பிரமாணங்களெனக் கொண்டு திருமாலே ஸர்வேசுவரன் என்றும், அவனடி அடைதலே மோக்ஷமென்றும் ஐயமறத் தெளிந்தவர். இதனை இவரருளிய பிரபந்தங்களில்:—

"ஓஓ உலகினது இயல்பே!
ஈன்றோள் இருக்க, மணைநீ ராட்டி
படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து
அளந்து தேர்ந்துலகு அளிக்கும் முதற்பெருங்
கடவுள் நிற்கப், புடைப்பல தானறி
தெய்வம் பேணுதல்"—(திருவாசிரியம், (௬.)
"ஓராலிலைச் சேர்ந்த வெம்
பெருமா மாயனை யல்லது
ஒருமா தெய்வமற் றுடையமோ யாமே" (ஷ-7.)
"தேவும் எப்பொருளும் படைக்கப
பூவில் நான்முகனைப் படைத்த
தேவன் எம்பெருமானுக் கல்லால்
பூவும் பூசனையுந் தகுமே"

"தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமம்
சேர்த்தி யதுவே சிவன்முடிமேற் றான்கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழா யான்பெருமை
பேர்த்தும் ஒருவராற் பேசக் கிடந்ததே"
மார்க்கண்டேயனுங் கரியே கறுத்த மனமொன்றும்
வேண்டா கண்ணல்லால் தெய்வமில்லை"

என்பன முதலியவற்றால், ஆழ்வார் விஷ்ணுபாரம்யம் கொண்டமை நன்கு வெளியாகும். ஆனால், தாம் கொண்டிருந்த

விஷ்ணுபக்தியின் மிகுதியால் ஏனைய அடியார் சிலர்போல, தேவதாந்தரங்களை இகழ்ந்துரையாது, அவரெல்லாரையும் ஸர்வேசுவரன் அவயவ பூதர்களாக உடையன் என்றும், அவ்வவர் தகுதிக்கும் பக்குவத்துக்கும் ஏற்பச் செய்யும் தெய்வவழிபாடெல்லாம் முடிவில் அவ்வெம்பெருமானையே சேர்வன என்றும், ஆதலால், அவ்வவர் தத்தம் தெய்வங்களை வழிபடத் தடையில்லை என்றும், கொண்டு பிறகடவுளரை இகழாது புகழவே செய்வர். இக்கருத்துக்களை:—

"இறுக்கும் இறையிறுத்துண்ண எவ்வுலகுக்குந் தன் மூர்த்தி
நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வ நாயகன் தானே"

" அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே"

" உணர்ந்துணர்ந்து இழிந்தகன்று உயர்ந்துரு இகந்தவிந்நிலைமை
உணர்ந்துணர்ந் துணரினும் இறைநிலை உணர்வரிது உயிர்காள்!
உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து அரிஅயன் அரன்என்னுமிவரை
உணர்ந்துணர்ந்து உரைத்துரைத்து இறைஞ்சுமின் மனப்பட்ட
[தொன்றே"

" ஒன்றெனப்பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகன் அரனென்னுமிவரை
என்றறு மநத்துவைத் துள்ளிநும் மிருபசை யறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே"

என்ற பாசுரங்களால் அறியத்தக்கன. இங்ஙனம், திருமாலே பரதெய்வம் என்று கொண்டு, ஏனைய தெய்வ வழிபாடுகளில் அத்வேஷியாய் விளங்கிய ஆழ்வார், கருதித் தனக்கொரு பாரமும் இன்றி, அவன் வழிநின்று அவனருளை நினைந்திருத்தலாகிய ப்ரபத்தி மார்க்கமே, வீடுபேற்றுக்கு நேர்வழி என்னும் பெருங்கொள்கையுடையவர். அவாவற்றுத் தத்தவஞானம் அடைதல் மோக்ஷமடைதற்கு வழியேயாயினும் அம்முறையில் இடையூறு சம்பவித்

தலுங் கூடுமென்றும், ஆனால் ப்ரபத்தி நிஷ்டையோ எவ்வித இடையூறுமின்றி, பரமபதத்தை எளிதில் அடையச் செய்யும் நேர் மார்க்கம் என்றும், இதுவே உஜ்ஜீவனஹேது என்பதும், தாம் அநுபவித்து உணர்ந்ததென்றும், ஆழ்வாரே அருளிச் செய்தவ அடியில் வரும் பாசுரங்களால் தெரியலாம்.

"குறுகமிக உணர்வத்தொடு நோக்கி எல்லாம்விட்ட
இறுகலிறப்பென்னும் ஞானிக்கும் அப்பய னில்லையேல்
சிறுக நினைவதோர் பாசமுண்டாம் பின்னும வீடில்லை
மறுகலில் ஈசனைப்பற்றி விடாவிடில் வீடஃதே"
"அஃதே உய்யப்புகும் ஆறு என்று கண்ணன் கழல்மேல்
கொய்பூம் பொழிற் குருகூர்ச் சடகோபன் குற்றேவல்"

இத்தகைய ப்ரபத்தி நிஷ்டையில் நின்று பரம்பொருளை ஸாக்ஷாத்கரித்து அநுபவித்த ஆழ்வார்க்கு, த்ரைலோக்யாதிபத்யமும், தானே பிரமமாய் நின்று அநுபவிக்கும் கைவல்ய பதவியும் இவை யெல்லாவற்றுக்கும் மேற்பட்ட நிரதிசயாநந்த நிலையாகிய பரம பதமுங்கூட சிறியனவாகவே காணப்பட்டன எனின், அந்நிஷ்டையின் பெருமை எத்தகையதாம்? இச்செய்தி:—

"குறுகா நீளா இறுதிகூடா எனையூழி
சிறுகா பெருகா அளவில் இன்பஞ் சேர்ந்தாலும்
மறுகா லின்றி மாயோன் உனக்கே ஆளாகும்
சிறுகாலத்தை உறுமோ அந்தோ தெரியிலே"

"வியன் மூவுலகு பெறினும் போய்த் தானேதானேயானாலும்
புயல் மேகம்போல் திருமேனியம்மான் புனைபூங்கழலடிக்கீழ்ச்
சயமே அடிமைதலை நின்றார் திருத்தாள்வணங்கி இம்மையே
பயனேய் இன்பம் யான்பெற்ற துறுமோ பாவியேனுக்கே"

என்ற பாசுரங்களால் உணர்க. விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் தானே பிரமமாய் நின்று அநுபவிக்கும் கைவல்யம் என்ற பதவியையும் கடந்துள்ள நிலையே பரமபதமென்பது கொள்கை. இக் கைவல்யம், கேவலம் ஞானத்தால் அடைதற்கும், நித்ய விபூதியாகிய பரமபதம் முற்கூறிய ப்ரபத்தி நிஷ்டையால் அடைதற்கும்,

உரியன என்பது அறியத்தக்கது. இந்த சித்தாந்தத்திற்கு ஏற்ப, மேற்கூறிய பாசுரங்கட்குப் பூர்வாசாரியர் பொருள் கூறுவர். இவற்றால், கேவலம் ஞானத்தாலன்றி, சர்வேச்வரனையே உபாயோபேயமாகப் பற்றுகை ஆகிய ப்ரபத்தியே மோக்ஷஸாக்ஷாத் காரஹேது வென்பது ஆழ்வார் மதமாதல் தெளியலாம்.

"அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத் தவரறிய
நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி"

என்ற ஆழ்வார் திருவாக்குப்படி, உலக முழுதும் அறிந்து போற்றுவதும், கண்ணபிரானால் அருளப்பட்டதுமான ஸ்ரீபகவத் கீதையின் முடிந்த கொள்கை இப்பிரபத்தி மார்க்கமே யாகுமென்பது ஸ்ரீ வைஷ்ணவ கிரந்தங்களில் நன்கறியப்படும். இப்ரபத்திப்பேறே இராமாநுஜ சித்தாந்தத்தின் முடிச்சுமாகும். இந்நிலையின் அருமை பெருமைகளையும், ஸம்ஸாரியான சேதநன் அறிந்து உஜ்ஜீவிக்கைக்கு ஹேதுவான அர்த்த பஞ்சக ஞானத்தையும் உலகமுய்ய ஆழ்வார் திருவாய் மொழியில் அருளிச் செய்வர். அர்த்த பஞ்சகமாவன:—ஸ்வஸ்வரூபமும், பரஸ்வரூபமும், புருஷார்த்த ஸ்வரூபமும், உபாயஸ்வரூபமும், விரோதிஸ்வரூபமும் ஆகிய இவ்வைந்தின் தன்மைகளையும் உணர்ந்து தெளிதல். இவற்றின் விரிவு பெரியோர் வாயிலாக உணரற் பாலது. திருவாய்மொழி இவ்வர்த்த பஞ்சகத்தையும் உபதேசிப்பதென்பது

"மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும்,
தக்க நெறியும், தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும், வாழ்வினையும் ஓதும், குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்"

என்னும் ஸ்ரீபட்டர் திருவாக்காலும் அறியத் தக்கது. இனி, இத்தகைய ஞானவிசேஷத்தோடு ப்ரபத்தி நிஷ்டனுயுள்ள சேதநன், முடிவில் அடையும் அழியாப்பதம், ஆழ்வாரால், "நலமந்தம் இல்லதோர் நாடு" "மாமணி மண்டபத்து அந்தமில் பேரின்பம்." "சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதி" என்று வர்ணிக்கப் பட்டுள்ளது. இப்பரமபதமே, சுருதிகளிலும், "க்ஷயம்

தமஸ்யரஜஸ: பராகே” “த்ரிபாதஸ்யாம்ருதம்திவி” “தத்க்ஷரே பரமே வ்யோமம்” “தத்விஷ்ணோ: பரமம் பதம், ஸதாபஶ்யந்தி ஸூரய:” என்பன முதலாக விளக்கப் படுவதென உணர்க. இத்தகைய மோக்ஷநிலையடைதற்குரிய அர்ச்சிராதி மார்க்கத்தையும் ஆழ்வார் “சூழ்விசும் பணி முகிற்றூரிய முழங்கின” என்ற திருப்பதிகத்தால் அருளிச் செய்தனர். சுருங்கக் கூறுவோமானால், ஸ்ரீ இராமாநுஜ சித்தாந்தத்தின் முடிபுகட்கெல்லாம் ஆதாரமாய் நின்று விளங்குவது, ஆழ்வார் திருவாக்கென்றே சொல்லலாம். இவ்வற்புதம் பற்றியன்றோ, வடத்தூர் கடலை நிலைகண்டுணர்ந்த ஸ்ரீமத் வேதாந்த தேசிகனும், தாம் ஸகல சாஸ்திரங்களாலும் காணமுடியாதிருந்த வேதாந்தங்களெல்லாம் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளால் அறிந்ததை வியந்து “செய்ய தமிழ்மாலைகள் யாம்தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே” என்று அருளிச் செய்வாராயினர்; இதுபற்றியன்றோ, அத்தேசிகன் முதலியோர்க்கும் பரமாசாரியராய் விளங்கிய ஸ்ரீ ராமாநுஜரும்

“ உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும்
வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர்
நெறிதருஞ் செந்தமி ழாரணமே என்று நீணிலத்தோர்
அறிதர நின்ற இராமாநுஜன் எனக்காரமுதே”

என்று, அவர்காலத்துப் பெரியோரால், புகழப்பட்டனர். இது பற்றியன்றோ, அவ்விராமாநுஜர்க்கும் பரமாசாரியராகிய ஸ்ரீ ஆளவந்தார் “எமது வம்சத்தாருக்கு எந்நாளும் தாயுந்தந்தையும் மனைவியரும் மக்களும் செல்வமும் எல்லாம் ஆவது எதுவோ, அந்த எமது குலமுதல் தலைவரான நம்மாழ்வாருடைய மகிழ்மாலையணிந்து விளங்கு திருவடிகளைத் தலையால் வணங்குவேன்” என்று பொருளில்

“மாதா பிதாயுவதயஸ்தனயா விபூதிஸ்
ஸர்வம் யதேவ நியமேந மதந்வ யாநாம்
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா”

என அருளிச்செய்தார். வைதிக ஸார்வபௌமராகிய ஆளவந்தாரே தம்முடைய ஸ்ரீ வைஷ்ணவ குலத்திற்குத் தலைவர் ஆழ்வார் என்று

கூறுவரெனின், அவ்வாழ்வார் அவதார மகிமையை யாம் எங்ஙனம் இயம்பவல்லேம்! "தோன்று உபநிடதப் பொருள் தோன்றலுறாஃ தமக்கும் சான்றாமிவை என்றபோது மற்றென்?"

இனி ஆழ்வார், தாம் ப்ரபத்தி பண்ணுதற்கு மிகவும் உகந்தருளிய மூர்த்தி, திருமாலின் பூர்ணாவதாரமாய் விளங்கிய கண்ணபிரானே. ஏனெனில், திருவாய்மொழியிற் பெரும்பாகம், அப்பெருமானது ஸௌசில்ய ஸௌலப்ய ஸௌந்தர்யாதி குணவிசேடங்களே உயர்வும் உருக்கமும் உண்டாகப் புகழப் பட்டுள்ளமை காணலாம். "மத்துக்கடை வெண்ணெய் களவினிலுரலிடை யாப்புண்டு எத்திறம் உரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவே" என்று, அப்பிரானது பரம ஸௌலப்யத்தை நினைந்து நினைந்து உருகி, ஆறுமாதம் வியாமோகித்துக் கிடந்தார். ஆழ்வார் என்று கூறுவர் முன்னோர். கண்ணனது இவ்வற்புத குண விசேடத்தை

"துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி நின்றவண்ணம் நிற்கவே
துயரின் மலியும் மனிசர் பிறவியிற் றோன்றிக் கண்காணவந்து
துயரங்கள் செய்து தன் தெய்வநிலை உலகிற்புகவுய்க்கும் அம்மான்"

என்று மற்றோரிடத்தும் வியந்தருளிச் செய்தல் காண்க. இங்ஙனம், ஏனைய அவதாரங்களிலும் கண்ணனையே தாம் விசேடமாகப் பற்றுதற்கு அவன், தன் பரமகிருபையால் அருளிய கீதையின் முடிவில் "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று பொதுவாகக் கூறியது மட்டும் அன்றி, சிறப்பாக, தன்பொருட்டே என்னை அடிமை கொண்டு, 'எனக்கே நீ ஆட்செய்' என்று தம் முள்ளத்துள் நின்று அப்பெருமான் அடிக்கடி உணர்த்திவருதலே காரணம் என்கிறார் ஆழ்வார், இதனை—

"எனக்கே ஆட்செய், எக்காலத்தும் என்றென்
மனக்கேயாக வந்து, இடையிடின்றி மன்னித்,
தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே
எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே"

என்ற பாசுரத்தால் நன்றாக அறியலாகும். இவ்வாறு, இளம்பருவத்தேயே கண்ணன் நிர்ஹேதுகமாக ஆழ்வாரை அநுக்ரகித்து அடி-

மை கொண்டமையால், அப்பெரியார்க்கு அப்பிரானே உபாயமும் உபேயமும் என்ற ப்ரபத்தி நிகழ்ந்து, பரமஞானிகளாலும் கிட்டுதற்கரிய பெருமானை ஸாக்ஷாத்கரித்து நேரே பேசவும், பேசத்தெரிந்த அநுபவங்களை உலகமுய்ய உணர்த்தவும் வல்ல பெரும்பேறு கிடைத்தது.

"அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து
அறியா மாமாயத்து அடியேனை வைத்தாயால்"

எனத்தம்மை அவன் மிக்க இளமையிலேயே ஆட்கொண்டதையும்

"எனதாவியுள் கலந்த பெருநல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன், இனிமீள்வதென்பதுண்டே;
எனதாவியாவியும் நீ; பொழிலேழும் உண்ட எந்தாய்!
எனதாவியார்? யானார்? தந்தநீ கொண்டாக்கினையே"

"உணர்விலும்பர் ஒருவனை அவனதருளால் உறற்பொருட்டென்
உணர்வினுள்ளே இருத்தினேன்: அதுவும் அவனதின்னருளே"
"ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாயுனக்கு
மாறுநான் ஒன்றிலேன்: எனதாவியும் உனதே"

என உபாயமும் உபேயமும் அவனே என்று தாம் பற்றி நின்றதை ஆழ்வாரே விளங்கக் கூறுதல் காணத்தக்கது. இவ்வாழ்வார்க்கு ஸர்வேசுவரன் எக்காரணம் பற்றி இத்தகைய பேரருள் செய்தான் எனின்:—அப்பெருமானது நிர்ஹேதுக பரமகிருபையேயல்லது வேறில்லை என்பர் பூர்வாசாரியர்கள். இதனை ஆழ்வாரே

"இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்
எந்நன்றி செய்தேனோ என்னெஞ்சிற் றிகழ்வதுவே"

"அறியாதன அறிவித்த அத்தா! நீ செய்தன அறியேனே"
"பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய்"
"என்னைத் தீமனங் கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமே தந்தாய்"

என்பன முதலாகப் பலவிடத்தும் கூறுதல் காணலாம்.

(இன்னும் வரும்)

மு. இராகவன்.

## தேசுரும் தேகியும்.

(118-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆம், அப்படித்தான் காண்கின்றது. நமக்குக் காற்றே சும்மா வருகிறது. ஆகையால் கப்பலை நேர்வழியிற் செலுத்தாமல் வேறு மார்க்கமாய்ச் செலுத்தி அதனால் என்னதான் வருமோ பார்ப்போ மென்று எனக்கு நிரம்ப மனமிருக்கிறது."

"நான் தங்களுடைய ஸ்தானத்திலிருந்தால் நான் தப்பாமல் அப்படியேதான், ஐயா, செய்வேன். என்ன கெட்டாலும் அற்ப நேரந்தானே போகும்."

"நல்லது பார்க்கலாம். மேல்தளம் போய் வடமேற்காய்ப் போக்குக்கொடுத்து ஓட்டும்" என்று காப்டேன் உத்தரவு செய்ய வும் ப்ருஸ் என்பார் போக எழுந்திருந்ததும் "இன்னொன்று, பாய் மரத்தின் உச்சியில் விழிப்பாய்ப் பார்த்துவர ஒரு காவலாளை நிறுத் திவையும், அந்த ஆள் நம்பிக்கை யுள்ளவனா யிருக்கட்டும்" என்று காப்டேன் வற்றிச்சொன்னார்.

அவருடைய கட்டளைப்பிரகாரம் செய்தார்கள். சுமார் மூன்று மணிக்குக் காவலாள் எதிரே நீர் உறைந்து மலையாய்ப் பனிக்கட்டி மிதக்கிறதாகவும் அப்புறம் சற்றுநேரம் பொறுத்து அந்தப்பனிக் கட்டிக்குன்றுக்கடுத்து ஏதோ ஒருவிதக்கப்பல் தனக்குத் தோன்று வது போலும் விக்ஞாபகஞ்செய்தான்.

அதைச் சமீபித்துப் போகப்போக காப்டேனுடைய நச்சுக் குழல் பார்வைக்கு நீர் சுற்றிலும் உறைந்து பனிக்கட்டிக்கு மத்தி யில் அகப்பட்டுக்கொண்ட பாயிழந்த சிறு கப்பலொன்றும் அதில் அநேக ஜனங்கள் இருப்பதாகவும் காட்டிற்று. சற்றுநேரத்திற் கெல்லாம் அடுத்துப்போய்க் கப்பலை நிறுத்தித் துன்புற்றிருக்கும் ஜனங்களின் உதவிக்குத் தோணிகளை யனுப்பினார்கள்.

அந்தச்சிறு கப்பல் ஜனங்களுடன் குவீபெக் என்னுந் துறையி லிருந்து லிவர்பூலுக்குப் போகுங் கலம் என்று தெரியவந்தது. அது பனிக்கட்டிக்குள் அகப்பட்டுக் கடைசியாய் அதைச் சுற்றிலும் நெருங்கி நீர் உறைந்துவிட்டது. ஆகையால் அது சில வாரங்களாக அதிக ஆபத்தான நிலைமையிலிருந்து காலங்கழித்து வந்தது. அது

சேதப்பட்டு அதிலிருந்த உணவுக்கான பண்டங்களும் குடிக்கவைத் திருந்தஜலம் ஏறக்குறைய முழுவதும் செலவழிந்துபோயின. அதிலி ருந்த பிரயாணிகளும் வேலையாட்களும் தங்களுக்கு ஏதாவது மீட்சி யுண்டாகும் என்ற ஆசையை முற்றும் இழந்துவிட்டார்கள். ஆகையால் தாங்கள் சற்றும் எதிர்பாராமலிருக்கவும் உயிர் பிழைக் கும்படி தங்களுக்குக் கிடைத்தவுதவிக்கு அவர்கள் அதிக நன்றி பாராட்டுதல் செய்தார்கள்.

சேதப்பட்ட கப்பலுக்கு அனுப்பப்பட்ட மூன்றாவது தோணி திரும்பிவந்து அதில் வந்த ஜனங்களில் ஒருவன் பெருங்கப்பலின் பக்கத்தில் ஏறி வரும்பொழுது உபாதிகாரியானவர் அவனுடைய முகத்தைப் பார்த்தாரோ இல்லையோ உடனே வெருண்டு திடுக்கிட் டுப் பின்னடைந்தார். காப்டேன் மேஜையண்டையிலிருந்து தன்னை நிமிர்ந்து பார்க்க மூன்று நான்கு மணி நேரத்திற்குமுன் தான் கண்ட முகந்தான அது.

முதலில் இது பிரமையாயிருக்குமென்று எண்ணும்படி தன் மனதை இசையச் செய்ய முயன்றார்; ஆனால் அந்த மனிதனைப் பார்க்கப்பார்க்கத் தான் முதலில் அபிப்பிராயப்பட்டது தான் சரி யென்று அவருக்கு நிச்சயப்பட்டது. முகம் மாத்திரமன்று, பூரண உருவமும் உடையும் உள்ளபடியே ஒத்திருந்தன.

வேலைக்காரர்களும் பட்டினியால் வருந்தியிருந்த பிரயாணிக ளும் கவனிக்கப்பட்டு அவர்கள் களைதீர்ந்து அப்பால் பெருங்கப்பல் மறுபடியும் பயணம் போக ஆரம்பித்தவுடனே உபாதிகாரி காப் டேனைத் தனியே ஒரு புறமாய்க் கூப்பிட்டு "ஐயா, நான் இன்று பார்த்தது பூதம்,பேய், பிசாசு என்பவைகளில் ஒன்றுமல்லவென்று தோன்றுகிறது; அந்த மனிதன் உயிருடனிருப்பவன்" என்றார்.

"நீர் என்ன நோக்கமாய்ப் பேசுகின்றீர்? யார் உயிருடனிருக் கிறான்?"

"என் ஐயா, நாம் இப்பொழுது தான் மீட்டெடுத்த பிர யாணிகளில் ஒருவன், மத்தியானம் தங்கள் கற்பலகையில் எழுதிக் கொண்டிருக்க நான் கண்ட மனிதனே. நான் நியாய ஸ்தலத்திலிரு ந்து சத்தியம் பண்ணிச் சொல்வேன்."

205.



"என்னுணைப்படி, ப்ரூஸ், இது வர வர அதிக விந்தையும் விநோதமுமாகின்றது. வாரும் நாம் போய் அந்த மனிதனைப்பார்க்கலாம்."

அவர்கள் அந்த மனிதனைச் சிறுகலத்தின் மீகாமனுடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கக் கண்டார்கள். அவ்விருவரும் முன்னேறி வந்து பட்டினியாலும் பனி வெயிலி லடிபடுவதினாலும் மெல்ல மெல்ல வரும் மரணமாகிய பயங்கரமான விதியினின்றும் காத்து விடுவித்ததற்காகத் தங்கள் நன்றியறிதலை மிகவும் உற்சாகங் கொடுக்கத்தக்க வார்த்தைகளால் தெரிவித்தார்கள்.

காப்டேன் தான் அந்த நிலைமையிலிருந்தால் அவர்கள் நிச்சயமாய்த் தனக்கு என்ன செய்வார்களோ அதைத்தான் தானும் செய்ததாகக்கூறி அப்பால் கேபின் அறைக்குள் சற்று இறங்கி வரும்படி கேட்டுக்கொண்டார். அப்புறம் அந்தப்பிரயாணியை நோக்கி "ஐயா, நான் உம்மிடம் பகிடி செய்வதாக எண்ணமாட்டீர் என நம்புகிறேன், ஆனால் ஒன்று இந்தக் கற்பலகையில் சில வார்த்தைகள் எழுதுவீரானால் நான் உமக்கு மிகவுங்கடமைப்பட்டிருப்பேன்" என்று சொல்லிக்கொண்டு எழுதியில்லாத பக்கத்தைத் திருப்பி மேலாக வைத்துக்கொடுத்தார். நீர் யாது கேட்கினும் அதைச் செய்வேன். ஆனால் என்ன எழுதட்டும்" என்று பிரயாணி கேட்டார்.

"எனக்கு வேண்டியதெல்லாம் சில வார்த்தைகள் தான். "வடமேற்காய் நடாத்து" என எழுதுங்கள் பார்ப்போம்."

அந்தப்பிரயாணி அவருடைய இப்படிப்பட்ட வேண்டுகோளுக்குக் காரணம் காணமல் மயங்கினும் முகமலர்ச்சியாய் உடன்பட்டார். காப்டேன் கற்பலகையை வாங்கி நுட்பமாய்ச் சோதித்தார். அப்புறம் அந்தப்பிரயாணி பார்க்காமல் மறைவாயிருக்கும்படி சற்று அப்பால் விலகி மறுபக்கத்தைத் திருப்பி மறுபடியும் பலகையைப் பிரயாணியிடம் கொடுத்து "இது உம்முடைய கையெழுத்தென்று சொல்லுகிறீர்?" என்று கேட்டார்.

"நான் அது சொல்லவேண்டாமே; நான் எழுதுவதைத் தான் கண்டிருந்தீர்களே" என்று எழுத்தைப் பார்த்துக்கொண்டு பிரயாணி சொல்லினர்.

பலகையை மறுபுறந் திருப்பிக் காண்பித்துக்கொண்டு "இதுவும்?" என்று காப்டேன் கேட்டார். அந்தப்பிரயாணி மிகவும் மலைத்து நின்று முதல் ஒருபக்கத்து எழுத்தையும் அப்புறம் மற்றப் பக்கத்து எழுத்தையும் திருப்பித் திருப்பிப் பார்த்து கடைசியாய் "இதினுடைய அருத்தம் என்ன? நான் இவைகளில் ஒன்றே ஒன்று தானே எழுதினேன். இன்னொன்று யாவர் எழுதினார்?"

"அதுசொல்ல என் சக்தியை மீறி நிற்கின்றது, ஐயா இதோ இவ்விடமிருக்கும் என் உபாதிகாரி தாங்கள் இன்று மத்தியானம் என் மேஜையண்டை உட்கார்ந்து எழுதினதாகச் சொல்லுகின்றார்."

சிறு மரக்கல மீகாமனும் அந்தப் பிரயாணியும் அதிசயமும் தெருட்சியும் குறிக்கும் கண்சாடைகள் மாறி மாறிக் காட்டிக்கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்து நின்று அப்பால் "இந்தப் பலகையில் எழுதினதாகக் கனவில் நீர் கண்டீரா?" வென மீகாமன் பிரயாணியைக் கேட்டார்.

"இல்லை ஐயா! எனக்கு ஞாபகமிருக்குமட்டில் இல்லை."

"கனவு என்று பேசுகிறீரே இன்று மத்தியானம் இவர் என்ன செய்துகொண்டிருந்தார்?" எனப் பெரிய கப்பலின் காப்டேன் கேட்டார்.

"காப்டேனே! காரியம் முழுவதும் மிகவும் மனதுக்கெட்டாத மறைபொருளாயும் இயல்பு கடந்த அதிசயமானதாயு மிருக்கின்றது. எல்லோரும் சற்று இளைப்பாறி ஓய்ந்ததும் இதைப்பற்றித் தங்களிடம் பேசவேண்டுமென்றிருந்தேன். இவர் (அந்தப் பிரயாணியை சுட்டிக் காட்டிக்கொண்டு) மிகவும் களைத்துப்போனமையால் உச்சி நேரத்திற்குச் சற்றுமுன் அயர்ந்த நித்திரையில் அல்லது நித்திரையென்று தோன்றினதில் ஆழ்ந்தார். ஒரு மணி அல்லது சற்று அதிக நேரங்கழித்து விழித்து என்னைப்பார்த்து மீகாமனாரே, இன்றே நமக்கு உதவிகிடைக்கும் என்றார். இப்படிச்சொல்வதற்கு உமக்கென்ன காரணமிருக்கின்றது என நான் கேட்கவும், தான் ஒரு பெருங் கப்பலுக்குள் போயிருந்ததாகவும் அப்பெருங்கப்பல் எங்கள் உதவிக்கு வருவதாகவுங்கூறி அக்கப்பலின் தோற்றத்தையும் அணியையுஞ் விவரித்துச் சொல்லினார். தங்கள் கப்பல் எங்கள் பார்வைக்கு

வந்து நிற்கவும் நாங்கள் முற்றும் அதிசயிக்கும்படி அது அவர் விவரித்த குறிப்புகளுக்கெல்லாம் இம்மியும் பிசகாமல் ஒத்திருந்தது."

"சந்தேகமேயின்றிக் கற்பலகையில் எழுதியிருந்த எழுத்து அவ்விடத்தில் வந்தது எவ்விதத் தாலாயினுஞ்சரி, அவ்வெழுத்து தான் உங்கள் உயிரை யெல்லாம் காப்பாற்றிற்று. அக்காலத்தில் அதிகமும் தென்மேற்காகக் கப்பலை நடாத்திக்கொண்டிருந்தேன். இவ்வெழுத்தினால் வடமேற்காய்த் திருப்பி ஓட்டிப் பாய்மரத்தின் உச்சியில் ஒரு காவலாளை என்னதான் வருமோ பார்க்கலாமென்று வைத்திருந்தேன். ஆனால் நீர் (அந்தப்பிராணி பக்கம் திரும்பிக் கொண்டு சொல்லுகிறார்) கற்பலகையில் எழுதக் கனவில் காணவில்லை யென்று சொல்லுகிறீர்?"

"இல்லை, ஐயா, எனக்கு அப்படிச் செய்ததாக ஞாபகமேயில்லை. நான் கனவில் கண்ட பெருங்கப்பல் எங்களை இரக்ஷிக்க வருகிறதென்று எண்ணம் மாத்திரம் எனக்கு இருந்தது. அந்த எண்ணம் எப்படி வந்தது என்பது எனக்குச் சொல்ல முடியாது. இது விஷயமாய் இன்னும் ஒரு விநோத சமாசாரமிருக்கின்றது. இக்கப்பலிலிருக்கும் சகலமும் எனக்கு நன்றாய்த் தெரிந்தது போலிருக்கிறது. ஆயினும் நான் இதற்குமுன் எப்பொழுதும் தங்கள் கப்பலிலேயே வந்ததில்லை யென்பது நிச்சயம். இதெல்லாம் எனக்கு குழப்பமாயிருக்கிறது. உங்கள் உபாதிகாரி என்ன பார்த்தார்?"

இப்பொழுது ப்ருஸ் என்பவர் நடந்ததை யெல்லாம் விவரமாய்ச் சொன்னார். இவ்விரண்டு விருத்தாந்தங்களிலும் தனக்கு நேரிட்டிருந்த அதிக ஆபத்தினால் மனதில் உயிர் தப்பிப் பிழைக்க வேண்டுமே யென்னும் அவாதோன்றி அந்த அவாவானது மிகுந்த வேகத்துடன் தூண்டிச்செலுத்த தேகியானவன் தேகத்தை விட்டுப்போய்ச் சகாயம் உண்டாகும் வழியைத் தேடிக்கொண்டான்.

ஆனால் மறுபடியும் தேகத்திற்குள் வந்து புகுந்தபொழுது தான் செய்ததைப் பூரணமாய் மூளையில் பதிவு செய்யாததால் விழித்தபோது அது பூரணமாய் ஞாபகத்திற்கு வரவில்லை.

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

## வருஷம்: அதன் உண்மை.

(126-ம் பக்கத் தொடர்ச்சி.)

முற்காலத்தில் ப்ருஹஸ்பதி வர்ஷமானது ஸாவந வர்ஷம் போல 360 நாட்கள் தான் என்றும், அவ்வாறு 60 ப்ருஹஸ்பதி வர்ஷங்கள் கொண்டது 59 ஸௌர வர்ஷங்களுக்குச் சமம் என்றும், க்ரமமாய் ப்ரபவ முதல் 59 வர்ஷங்கள் எண்ணிவந்த பிறகு, ப்ருஹஸ்பதிமானமும் ஸௌர மானமும் இணை பெறும்பொருட்டு கடைசி வர்ஷமான க்ஷய * (அதாவது தள்ள வேண்டிய) வர்ஷமென்றும் எண்ணப்பட்ட ஓர்வித ஸித்தாந்தத்தின் பேரில் இந்த ப்ருஹஸ்பதி மானம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாமென்று தோன்றுகின்றது.

பிற்காலத்தில், ப்ருஹஸ்பதி ஒரு ராசி செல்ல 361 நாட்கள் செல்லுகின்றனவென்று அறிந்தவுடன் தற்கால கணனம் வழக்கத்துக்கு வந்திருக்கலாம்.

### அநுஷ்டான பேதங்கள்.

ஸௌர ப்ருஹஸ்பதி மானம், இது தக்ஷிணதேசத்தில் வழங்குகின்றது. இதில், 365¼ நாட்கள் கொண்ட ஸௌர வர்ஷங்களே ப்ரபவாதியாய்ப் பெயரிடப்பட்டுவருகின்றன. இஃது ப்ருஹஸ்பதி மானமென்று தோன்றினாலும், உண்மையில் ஸௌர மானம் தான்.

மலையாள தேசத்தில் அந்தந்த வர்ஷம் ப்ருஹஸ்பதி இருக்கும் ராசியைக் கொண்டு, மேஷ வர்ஷம், விருஷப வர்ஷம், என்று முறையே 12 வருஷங்கள் கணக்கிடப்படுகின்றன. சில விடங்களில் மாஸங்களின் பெயர்களை யநுஸரித்து, மஹாசைத்திரம், மஹாவைசாகம், என்று முறையே 12 ப்ருஹஸ்பதி வருஷங்கள் கணக்கிடப்படுகின்றன.

### (நிஜ) ப்ருஹஸ்பதி வர்ஷங்கள்.

விந்திய மலைக்கு உத்தர தேசங்களில் வழங்கும் ப்ருஹஸ்பதி மானம் உண்மையாய் ப்ருஹஸ்பதியின் கதியை யநுஸரித்ததே. அவைகளும் ப்ரபவாதி 60 வருஷங்கள் கொண்டன. சூரியனை ப்ருஹஸ்பதி ஒரு தடவை சுற்றி வர 12 ப்ருஹஸ்பதி வர்ஷங்கள் (அல்லது 12 ஸௌர வர்ஷங்கள், 51 நாட்கள்) ஆகின்றன.

---

*குறிப்பு— சிலவிடங்களில் 'க்ஷய' என்றே வழங்கிவருகின்றது 'அக்ஷய' என்பது மங்கல வழக்காய் அமைந்துள்ளது.

அவ்வாறு 5 பரிவர்த்தநங்கள் செய்யக் கூடிய காலம் 60 ப்ருஹஸ்பதி வர்ஷங்கள் அல்லது 60 ஸௌர வர்ஷங்கள், 255 நாட்கள் கொண்ட காலமாகும். இவ்வநுஷ்டாநத்திலும் இருவகை யுண்டென்று தெரியவருகின்றது.

ப்ருஹஸ்பதி ஒரு ராசியில் பிரவேசித்து அது முழுமையும் (30 அம்சமும்) செல்லக் கூடிய 361 நாட்கள் கொண்டதே ப்ருஹஸ்பதி வர்ஷமாகக் கணிக்கப்படுவதொன்று. ஸௌர வர்ஷமானது $365\frac{1}{4}$ நாட்கள் கொண்டதாகையால், இவ்விரண்டு கணநங்களும் இணைப்படாது. இவ்வகை ப்ருஹஸ்பதி வர்ஷமானது ஸௌர வர்ஷத்தில் எந்தமாதத்திலும் எந்த தினத்திலும் துவங்கலாம். இவ்வநுஷ்டாநம் மிக்க அரிதானதென்று தோன்றுகின்றது.

இதுதவிர, ஒவ்வொரு ப்ருஹஸ்பதி வருஷத்தையும் ஸௌர வர்ஷாதியான சித்திரை மாதம் முதல் தேதியுடன் துவக்குவதும் இவ்வாறு 85 வர்ஷங்கள் கணக்கிட்டு வந்தபிறகு, இவ்விருகணநமும் ஒற்றுமைப் படும்பொருட்டு 86-வது வருஷத்தைத் தள்ளி 87-வது வருஷத்தையே அடுத்த வருஷமாய்க் கணிப்பதுமான ஓர் அநுஷ்டாநமும் உண்டு. உதாஹரணம், உத்தர தேச ப்ருஹஸ்பதிவர்ஷ கணநத்தில் 85வது வருஷம் கர வர்ஷமாய் ஏற்பட்டால் அடுத்த வருஷத்தை நந்தந என்று கணிக்காமல் அதற்கடுத்த வர்ஷமான விஜய வருஷத்தையே 86-வது வருஷமாகக் கணித்துவிடுவது வழக்கம்.

இவ்வித உபாயத்தால், ஸௌர கணநமும் ப்ருஹஸ்பதிகணநமும் ஒற்று விடுகின்றன. இப்பொழுது தக்ஷிணதேசத்தில் வழங்குவது பரீதாபி வருஷமாயிருக்க உத்தரதேசத்தில் வழங்குவது ரக்தாக்ஷியாயிருப்பதைப் பார்க்கலாம். மேற்கூறியவாறு 85 வருஷங்களுக்கு ஒரு வருஷம் வீதம் வர்ஜ்யம் செய்ததால் இவ்வாறு 12 வருஷ வித்தியாஸம் ஏற்பட்டிருக்கிறது.

## மஹமதிய வர்ஷங்கள்.

### ஹிஜ்ரா.

இது முற்றிலும் சாந்த்ரமாநத்தை யநுஸரித்தது, 12 சாந்த்ர மாஸங்கள் (354 அல்லது 355 நாட்கள்) கொண்டது. இந்த மாஸங்களெல்லாம் அமாந்தங்கள் (அதாவது சுக்லபக்ஷப்ரதமை தொடங்கி அமாவாஸ்யை ஈறாகவுள்ளவை.)

சாந்த்ரமாஸம் சுமார் 29½ நாட்களுள்ளவையாதலால், அம் மாஸங்கள் முறையே 29, 30 திநங்களுள்ளவைகளாய்க் கணிக்கப் படுகின்றன. இவ்வாறு துல்யதிந கணநத்தில், 30 ஹிஜ்ரா வர்ஷங்களில், துல்ய சாந்த்ரவர்ஷங்களைக் காட்டிலும் 11 திநங்கள் குறைவாகின்றன. இதைச் சரிப்படுத்தும் பொருட்டு, இந்த 11 திநங்களையும் வருஷம் ஒன்றுக்கு 1 திநம் விதம் சேர்த்து, 2, 5, 7, 10, 13, 15, 18, 21, 24, 26, 29 வது வர்ஷங்களை, 355 திநங்களுள்ளவைகளாய்க் கணித்து வருகின்றார்கள். இவைகள் அதிதிந (Leap) வர்ஷங்களெனப்படும்.

மகமதிய வர்ஷத்தின் முதல் மாதமானது முஹாரம் என்று பெயர். இது சுக்லபக்ஷப்ரதமையில் மாலை 6 மணிக்குத் துவங்குகின்றது. இது ஸௌர வர்ஷத்தில் எந்த மாதத்திலும், எந்த திநத்திலும் துவங்கும்.

சுமார் 30 ஹிஜ்ராவர்ஷங்கள்: 29 ஸௌர வர்ஷங்களுக்குச் சமமாகும். இவ்வித கணநமானது, மகமது ஓடினதிநமான கி. பி 622, ஜூலை 16௳ வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பம். [திவான்பஹதூர் ஸ்வாமிக்கண்ணுபிள்ளை அவர்கள் எழுதிய 'இந்து காலகணநம்' (Chronology) 18-வது அத்தியாயத்தைப் பார்க்க]

## பஸ்லி.

இது உத்தர தேசங்களில் மஹமதியர்களால் அநுஷ்டிக்கப் பட்டு வருகின்றது. இது ஸௌரசாந்த்ர மாநத்தை யநுஸரிக்கிறது. ஆச்விந கிருஷ்ண ப்ரதமை முதல் துவங்குகின்றது. இதன் மாஸம பூர்ணிமாந்தம் (பௌர்ணிமாவாஸ்யையை ஈறாகவுடையது.)

இது வங்காள தேசத்து ஸன் என்னும் சகாப்தத்தை விட ஒரு வருஷம் அதிகமாயுள்ளது. வர்த்தமாந கிறிஸ்தவ சகாப்தம் 592 = வர்த்தமாந பஸ்லி.

## சேன்னை பஸ்லி.

இது சென்னை ராஜதாநியில் ரிவினியூ முறைக்கு மாத்திரம் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. இது ஸௌரம், சாந்த்ரம் என்ற இரு கணநத்துக்கும் உட்படாதது. ஜூலை மாதம் 1-ம் தேதியில் துவங்குகின்றது. இதற்கு மாதவிபாகங்கள் யாதொன்றும் கிடையாது. வர்த்தமாந கிறிஸ்து சகாப்தம் 590 = வர்த்தமாந சென்னை பஸ்லி.

திவான்பஹதூர் ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை அவர்கள் எழுதிய காலகணநம் (Indian Chronology 15-வது அத்தியாயம் பார்க்க.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

# * சைவசமயம்

சைவசமயமென்னும் மொழி சைவ + சமயம் என்னும் இருமொழிகள் சேர்ந்த ஒரு தொடர் மொழி. "சைவம் சிவசம்பந்தம்" என்றவாக்கின்படி முன்னையது சிவனையுணர்த்தும். சமயம் என்பது ஆலயத்து இப்பொழுது என்னசமயம் என்று கேட்டவிடத்து அபிஷேக சமயம், அலங்காரசமயம் என்றும், ஒன்றும் நடவாத பொழுது ஒரு சமயமுமில்லை யென்றும் பதில் கிடைக்கு மநுபவத்தால் பின்னையது உண்மையை யுணர்த்தும். சிவம் என்னும் பொருள் உபலக்ஷணத்தால் ஆன்மாவையும் பாசத்தையுமுணர்த்தும், ஆகவே சைவசமயம் என்னும் தொடர்மொழிக்கு முப்பொருள் உண்மை யென்பது பொருளாம். இனி சைவம் என்பது "வேத நூல் சைவநூல்" என்ற திருவாக்கின்படி ஆகமத்தையுணர்த்தி ஆகமத்தினுண்மையென்று பொருள் கோடலு மொன்று. ஆகமம் முப்பொருளையே கூறுதலால் இருபொருளும் பொருந்துவனவாம்.

உண்மை யென்பது பூர்வபக்ஷம் செய்யப்படாது நிலைத்துநிற்றல். அது இருப்பு, இலக்கணம், சாதலம், பயன், என நான்கு திறப்படும். ஆகவே முப்பொருள்களின் இருப்பும், இலக்கணமும், ஆன்மா பாசத்தினின்றும் நீங்கி சிவனை அடைதற்குரிய சாதனமும் அடைந்தபோதுண்டாமநுபவ நிலையும் ஆகிய இவையே சைவ சமயமாம். இவ்வுண்மையினையுடையார் சைவசமயிகள், இவ்வுண்மைகளை யுணர்த்தும் நூல் சைவசமய நூல். சமயம் என்னுஞ் சொல் உண்மை யென்னும் பொருளைத்தரு மென்பதனை சமய "மென்பது தன்னையறிதலே" என்ற சிவஞான வள்ளலார் திருவாக்காலறிக.

இத்தகைய சைவசமயம் வேதத்தைத் தழுவியுள்ளது. இது பற்றியே "வைதிக சைவம் அழகிதந்தோ" என அருளிச் செய்தார் ஸ்ரீதாயுமானசுவாமிகள். வேதம், ஆகமமிரண்டும் இறைவனால் அருளிச்செய்யப்பட்ட நூல்கள். வேதம் கர்மகாண்டம், ஞான

---

* மதுரை பிரஹ்மஞ்ஞாந மந்திரத்தில் ஸ்ரீமாந் பொ. முத்தையபிள்ளையவர்கள் சென்ற மீ 25உயில் செய்த உபந்யாஸத்தின் சுருக்கம்.

காண்டமென இருதிறப்படும். கர்மகாண்டத்தில் ஒரு ஆன்மா பிரபஞ்சத்தினின்றும் விடுதலை யெய்தி சிவனையடையு முறைமையில் முன்னிலையாகக் காணப்படும் ஒன்றை விடுதற்கு அதனைப் பூர்வபக்ஷம் பண்ணுகின்ற பிறிதொன்றை உண்மையெனக்காட்டி அதன்மேல் அவ்வாறே ஒவ்வொன்றையும் பூர்வபக்ஷம் பண்ணும்படியான பல கோட்பாடுகள் அடங்கியுள்ளன. ஞானகாண்டத்தில் அவ்வாறு பூர்வபக்ஷம் பண்ணப்படாததாய் முடிந்தபொருள் அடங்கியுள்ளது. கர்மகாண்டத்திற் கூறப்படும் பூர்வபக்ஷப் பொருள்களை பிற்காலத்தில் ஒவ்வொரு மதமாக ஆக்கிக் கொண்டனர். அம்மதங்களெல்லாம் புறமதமெனப்படும். அப்புறமதப்பொருள்களை அங்கமாகவும் ஞானகாண்டப்பொருளை அங்கியாகவும் கொண்டுள்ளது சைவசமயமாம். இதுபற்றியே "இதுவாகுமதுவல்லதெனும் பிணக்கதின்றி நீதியினு லிவை யெல்லா மோரிடத்தேகாண நிற்பதியாதொரு சமயம் அது சமயம்" என்று அருளிச்செய்தார் ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.

முப்பொருள்களின் இருப்பு:—கடத்தைக்கண்டவிடத்து முதற்காரணமாகிய மண்ணும் நிமித்தகாரணனாகிய குயவனும் வாங்குபவனு முண்டென்று காணப்படுதல் போல, பிரபஞ்சத்தைக்கண்டவிடத்து முதற்காரணமாகிய மாயையும் அம்மாயையினின்று வெளிப்படுத்தும் நிமித்த காரணனாகிய சிவமும் பிரபஞ்சப் பொருள்களை அநுபவிக்கும் ஆன்மாவும் உண்டென்று கொள்ளப்படும். கொள்ளினும் முப்பொருள்களும் வியாபகமாய்ப் பிரிப்பின்றி நிற்கும். உவமைப் பொருள்போலவேறாய் நிற்பனவன்று, பூதமே உள்ளதென்பாரும் பூதமும், 'ஆன்மாவும் உளவென்பாரும் இவ்விரண்டுடன் கடவுள் ஒன்று உண்டென ஒப்புக்கொண்டு கடவுளுக்குரிய முழு இலக்கணமும் அமையப் பெறுதாரைக் கடவுளெனக் கொள்வாருமாகச் சமயிகள் பலதிறத்தர். அவ்வாறின்றி முப்பொருள்களையும் உள்ளவாறு கொள்வது சைவசமயம்.

இலக்கணம்:—முப்பொருள்களுக்கும் சொரூப இலக்கணம், தடத்த இலக்கணமென இரண்டிலக்கணங்களுளவாம். சிவனுக்குச் சொரூப இலக்கணம் அகண்டாகார ஸச்சிதாநந்த வியாபகம். தடத்த

இலக்கணம் பஞ்சகிருத்தியம் நடாத்தும் திருவுருவங்கள். ஆன்மாவுக்குச் சொரூப இலக்கணம் அந்தரியாமியாகிய இறைவனோடு பிரிப்பின்றி நிற்றல். தடத்த இலக்கணம் மாயாகாரியத்திற் கட்டுப்பட்டுப் பிறந்திறந்துழல்தல். பாசத்துக்குச் சொரூப இலக்கணம் காரணரூபமாய் நிற்றல். தடத்த இலக்கணம் காரியரூபமாய் வெளிப்படல்.

சாதகம்:— சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு திறப்படும்.

பயன்:— ஆன்மா பாசத்தினின்றும் நீங்கிச் சிவனைச் சார்ந்து பிரிப்பின்றி நின்று இன்புறுதல், இதுவே முத்தி, இம்முத்தியில் மும்முதலுண்டென்று சைவசமய நூல்களுள் உண்மை விளக்கமென்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. ஏனைய நூல்களில் முத்தியில் மலம் இல்லை யென்று கூறப்பட்டிருக்கின்றன. இவ்வாறு கூறும் வாக்கியங்களுக்கு முரணில்லாது பொருள் கோடலே சாஸ்திர சம்மதமாம். மலம் உண்டென்று கூறிய சாஸ்திரத்திற்கு ஆண்டு மலமுண்டென்பது கருத்தன்று. இன்பம் விளைவதற்கு ஏது மலமின்மையே யென்பது கருத்தாம். இன்மையாகிய ஏதுவை உண்டெனக்கூறல் "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே யெடுப்பதூஉ மெல்லாமழை" என்றார்போலும். மல நீங்கிய வழி கடல் நீரில் ஆற்றுநீர் போல் ஆன்மா சிவத்துடன் கலந்து நிற்கும். இந்நிலையை, பிரிக்க முடியாததால் ஒன்றென்றும் ஆற்று நீர் கடல் நீரைச்சாரும் வரை உள் பொருளாய் விளங்கி பின்னர் சுவறி விடாததால் இரண்டெனவுங் கூறல் இழுக்காதாதலின், அத்துவிதமென்பது சைவசமயமாம்.

பொ. முத்தையாபிள்ளை.

## பத்திரிகை வரவு.

---

காளமேகம் :—இது காரைக்காலில் சோமவாரந்தோறும் பிரசுரமாகி வெளிவரும் ஆங்கிலத்தமிழ் பத்திரிகை. இதில் இராமலிங்க ஸ்வாமிகளின் அருமையான பாசுரங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும், மற்றும் உயர்ந்த ஞானவிஷயங்களும் பொதுவான சமாசாரங்களும், வெளிவருகின்றன. இப்பத்திரிகையை யெல்லாரும் முக்கியமாக, பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்கள் ஆதரிக்கவேண்டுவது.

பத்திராதிபர்.

## சமாசாரம்.

---

நாளிதுமீ 20, 21, 22உ களில் பாண்டிய நாட்டிலுள்ள பிரஹ்மஞானக் கிளைச்சபைகளின் கூட்டம் தூத்துக்குடியில் கூடும். ஸ்ரீமாந் B. P. வாடியா என்பார் சபையின அக்ராஸநத்தை வகிப்பார். ஆங்கிலத்திலும் தமிழிலும் அநேக புத்திமான்களால் உபந்யாஸங்கள் நிகழும்.

---

சென்றமீ 24, 25உ களில் வடார்க்காட்டு ஜில்லா சித்தூரில் மத்ய ஜில்லாக்களிலுள்ள பிரஹ்மஞான கிளைச்சபைகளின் கூட்டம் கூடிற்று. ஸ்ரீமாந் B. P. வாடியா என்பார் அக்ராசநம் வகித்தார்கள், இங்கிலீஷிலும் தெலுங்கிலும் பல உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. அநேக அறிஞர்களும் பெரியார்களும் வந்திருந்தார்கள். ஹைக்கோர்டு நியாயாதிபதி பிரஹ்மஸ்ரீ சதாசிவ ஐயரவர்களும், அவர்களின் பத்நியாரும், ஸப்ஜட்ஜு பிரஹ்மஸ்ரீ டி. இராமச்சந்திரராயர் அவர்களும் அவர்கள் பத்நியாரும், பிரஹ்மஸ்ரீ எ. ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்களும், பிரஹ்மஸ்ரீ ஸப்ஜட்ஜு அவதாநலு அவர்களும், மைசூர் பிரஹ்மஸ்ரீ எ. மஹாதேவ சாஸ்திரியார் அவர்களும் இன்னும் அநேகரும் வந்திருந்தார்கள். பிரஹ்மஸ்ரீ B. C. ராகவ ஐயர் அவர்களும் அவர் சிநேகிதர்களும் விருந்தோம்பல் என்ற தர்மத்தைச் செவ்வன நடத்தினார்கள். பல கிளைச்சபைகளினின்று 73 அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். இரண்டு தினமும் எல்லாக் கார்யங்களும் நன்றாய் நடந்தன. ஷை மஹாஸபை கூடியதின் பிரயோஜநமாக சித்தூர் பிரஹ்மஞானஸபையார், தமது ஸபைக்கு ஒரு ஆலயம் வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். உடனே ஸ்ரீமாந் வாடியா அவர்கள் மூலமாய், வேதகோஷத்துடனே, ஷை சபையின் கட்டிடத்திற்கு சங்குஸ்தாபநம் செய்வித்தார்கள். கட்டிடத்திற்கு நன்கொடையாக ரூ 2,500 வரை ஏற்பட்டிருக்கிறது. மஹாத்மாக்களின் அருளால், மேற்கண்ட கட்டிடம் சீக்கிரம் அமையுமென எதிர்பார்க்கிறோம்.

**ஒட்டுக்கேட்கும் யந்திரம்:**—இருவர் இரகசியமாகப் பேசும் விஷயத்தை தூரத்தில் உள்ளவர் கேட்கும்படியாக டெலிபோனை (Telephone) இணக்கி சில கருவிகளைச்சேர்த்து, ஒட்டுக்கேட்கும் யந்திரம் ஒன்றை புதிதாய் ஒரு ஆங்கிலேயர் கண்டுபிடித்திருக்கிறார். அந்த யந்திரத்தை, ஜயில், வியாபாரச் சாலைகள் முதலிய இடங்களில் ஸ்தாபித்துள்ளார். அதனால், இரகசியங்கள் வெளிவந்துவிடுகின்றன.

---

**ஈக்களின் அபிவிருத்தி:**—ஒரு ஈயின் ஜீவகாலம் 5 வாரம். இதற்குள் எத்தனையோ பேரன்கள் பேத்திகள், கொள்ளுப்பேரன்கள் கொள்ளுப்பேத்திகள், அவைகளுக்கு அப்பாலும் 3 அல்லது 4 தலை முறைகளும் உண்டாகின்றன. ஒரு சமயத்தில் தாய் ஈ 100 முதல் 150 வரை முட்டைகளை இடுகின்றன. அவைகளைச் சாணிக் குவியலில் அல்லது அழுகிய குப்பைக் குவியலில் வைக்கின்றன. ஒரு வெயில் காலம் முடிகிறதற்குள்ளாக 20 லக்ஷம் முதல் 30 லக்ஷம் வரை சந்ததிகள் உண்டாகின்றன. ஒவ்வொரு ஈயின் சரீரத்தில், வியாதிகளை உண்டுபண்ணும் நுண்ணிய ஜீவராசிகள் (Bacteria) 60 லக்ஷம் முதல் 70 லக்ஷம் வரை குடிகொள்ளுகின்றன. ஈக்கள் பறந்து உணவிலும், பாகத்திலும் ஒரு விநாடி தங்கினால், எத்தனையோ 1000 க்கணக்கான வியாதி உண்டுபண்ணும் ஜீவராசிகளைப் பரப்பும். ஆதலால், மனிதனின் சத்துரு ஈக்கள். அவைகளே வியாதிகளைப் பரவச் செய்கின்றன. அவைகள் மொய்க்கும்படி, அழுகிய சாமான்கள், நீர் தங்கும் பள்ளங்கள் ஏற்படாமல் தவிர்க்கவேண்டும். எல்லா உணவுகளையும், பாகங்களையும் எப்போதும் மூடிவைக்கவேண்டும். பெரிய கொடிய நோய்கள் ஈக்களால் பரவச்செய்விக்கப்பெறவே எத்தனையோ மனிதர்கள் மாண்டுபோயினர். நாம் வசிக்கும் இடத்தை ஈக்கள் நாடாமல், சுத்தமாகவைத்துக் கொள்ளவேண்டும்.

---

**மாதுஸ்ரீ அந்நி பெஸண்டு அம்மை வருதல்:** நாளிது மீ 6-ம் தேதியில் அந்நிபெஸண்டு அம்மை முன் இங்கிலாண்டு முதலான நாடுகளுக்குச் சென்றவர் திரும்பி பம்பாய் நகரில் இறங்கி அன்றிரவே காசி நகருக்குச்சென்றிருக்கிறார்கள். தேகசௌக்கியமாகவும் முன்னரைவிட அதிக ஊக்கமும் தைர்யமுமுடையவராக இருக்கிறார் என்பதை அறிய சகலரும் சந்தோஷமடைகிறோம். இவர்கள் மேல்நாட்டுக்குப் போனகாரியம் மிகவும் உயர் நலமுள்ளது. அதை நம் தேசத்தில் நடத்த சௌகர்யமின்மை என்பதைப்பற்றிக் கேட்க வியசனிக்கிறோம். அதாவது, சிலபுனிதர்களுக்கு சன்மார்க்கமுறையில் தீக்ஷை செய்விக்க வேண்டுமெனக்கருத்து. அதற்கு ஏகாந்தஸ்தானம் கிடைத்தல் இந்தியாவில் அருமையாகிவிட்டதேயாம். ஞானிகளும் சித்தர்களும் ரிஷிகளும்

வஸித்து வந்த தேசம் இத்தன்மையான நிலைமைக்கும் வந்துவிட்டதேயென நினைக்கமனம் வருந்துகிறது. ஸிஸிலி என்ற தீவில் பாலர்மோ என்ற நகருக்கருகாண்மையில் 'டேயர் மைனு என்ற கிராமத்தில் அம்மை தான் உத்தேசித்த கார்யத்தைச் செய்து முடித்தனர். இதனால் உலகத்திற்கு இனி நலம் உண்டாகும், இதைப்பற்றி விவரமாகச் சொல்ல நாம் அநுமதி பெறவில்லை. ஸ்ரீமாந் லேட்பீடர் என்பாரும் சீக்கிரமாக வருவார். இவர் வரவை நல்லோர் யாவரும் அன்புடனே ஆதரித்து விரும்புவர்.

---

**ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் (Allen Octavian Hume) என்பாரின் மரணம்.**—இவர் சென்ற ஜூலை மீ 31 தேதி புதன்கிழமை காலையில் தம் ஸ்வந்த நாட்டில் (இங்கிலாந்தில்) மரணமாயினர். மரணகாலத்தில் இவருக்கு வயது 84. இந்தியர்களிடம் அன்பும் ஆதரவும் உள்ள ஆங்கிலர்களில் இவர் தலைமை பெற்றவர். இண்டியன் நாஷனல் காங்கிரஸ் (Indian National Congress) என்ற இந்தியா தேசத்துக்கு மஹாஜன சபையானது 1885ம் வருஷத்தில் பம்பாய் நகரில் முதன்முதல் கூடும்படியாகச் செய்ய நன் முயற்சியெடுத்துக்கொண்ட தீரர் இவர். ஜாதிவேற்றுமையாலும் மதவேற்றுமையாலும் ஸ்தலவேற்றுமையாலும் சிந்நாபிந்நப்பட்டு ப்ரத்யேகம் ப்ரத்யேகமாக, நடைபெறும் இந்தியர்களைப் பொதுப்படையாய்ப் பொது விஷயங்களைப் பற்றி நலம்பட நினைக்க இந்தியர்களுக்கு அறிவூட்டின புண்ணியர் இவர். 1885-ம் வருஷ முதல் நாளிது பரியந்தம் இந்தியாதேசத்து மஹாஜனசபை நலம்பெறும்படி கண்ணிமைபோல் அதைப் பாதுகாத்து இவர் நடத்திவந்தார். இந்தியர்களும் ஆங்கிலர்களும் ஒற்றுமையாய் வாழவேண்டுமென்றும், இருவருடைய யோக க்ஷேமங்களையும் ஒற்றுமையாய் நடத்தவேண்டுமென்றும், அவ்விதம் நடத்திவந்தால் தான் இந்தியாவும் இங்கிலாந்தும் நன்மை பெறுமென்றும் பன்முறை வற்புறுத்திச் சொல்லிக்கொண்டு வந்தனர். ஸமீபகாலத்தில் வங்காளத்தில் குழப்பமும் கொலையும் நேரிட்ட சமயத்தில் இந்தியர்களுடன் பொறுமை பாராட்டி இராஜாங்கத்தாரின் உத்தரவாதம் வகிக்கின்ற உத்தியோகஸ்தர்களுக்குப் பொதுவாய் இந்தியர்களுடைய நற்குணங்களையெடுத்துக்காட்டி அநுகூலமானசட்டதிட்டங்களை இராஜாங்கத்தார் நிர்மிக்கும்பக்ஷத்தில் குழப்பங்கள் முதலியவை அகன்றுவிடும் என்று தைரியம் சொன்ன தீரர்களுள் இவர் ஒருவர். அச்சமயத்தில் இராஜபக்தியை விருத்தி செய்து கொள்ளவேண்டுமென்றும், இராஜாங்கத்தாரின் மேலுள்ள துரோஹ சிந்தனையை அகற்றவேண்டுமென்றும், ஆங்கிலர்களுடன் ஸ்நேஹமாயிருந்தால் தான் க்ஷேமமுண்டென்றும், நமக்குவேண்டும் குறைகளை நேர்மையாகவும் ஒழுங்காகவும் நியாயவாயிலாகஇராஜாங்கத்தாருக்குத்தெரிவித்து நலம்பெற்றுக்கொள்ளலாமே யல்லாது, குழப்பமும் கலஹமும் தீயசெயல்க

லும் செய்து நலம்பெற முடியாதென்றும் நம்மவர்களுக்கு, முக்கியமாய் வங்காளிகளுக்கு நற்புத்தியுபதேசித்துவந்தார். சுமார் 40 வருஷ காலமாய் நம்தேசத்தார்கள் ஒருவரோடொருவர் பொறாமை, துவேஷம் முதலிய துர்க்குணங்களை நீக்கி நாம் ஒருவரோடொருவர் ஸ்நேஹமாக வாழவேண்டுமென்றும், துராசாரங்களை வர வரத் தொலைக்கவேண்டுமென்றும், ஞானமுறையிலும், உலகநீதிமுறையிலும் நம்மவர்கள் மேன்மையடைய வேண்டுமென்றும், ஆங்கில இராஜாங்கத்தை உறுதியான பற்றுக வைத்துக்கொண்டு ஆங்கில இராஜாங்கத்திற்குட்பட்டு ஸ்வதந்த்ரங்கள் பெறவேண்டுமென்றும், ஆங்கில இராஜாங்கத்தாரால் இந்தியர்களுக்கு உண்டாயிருக்கும் பல நலங்களை நினைத்து அவர்கள்பால் நன்றிபாராட்ட வேண்டுமென்றும் நம்மவருக்கு அறிவுறுத்தி வந்தனர். இவருடைய முயற்சியாலேற்பட்ட (Congress) மஹாசபை இடையிடையே பல இடையூறுகள் நேரிடப்பெறினும், அவைகளையெல்லாம் மேற்கொண்டு இந்தியா தேசம்முழுமையின் க்ஷேமலாபங்களைப் பாதுகாத்துக் குறைகளையும் வேண்டுகோள்களையும் அப்போதைக்கப்போது இராஜாங்கத்தாருக்குத் தெரிவிக்கும் ஸ்திரமான முக்கியஸாதனமாக ஏற்பட்டிருக்கிறது. சமீபகாலத்தில் இந்தியர்களுக் கேற்பட்டிருக்கிற அநேக ஸ்வதந்த்ரங்களும் உரிமைகளும் இந்த மஹாசபையின் நன்முயற்சியால் ஏற்பட்டுள்ளன. இவைகளுக்கெல்லாம் முக்கிய காரணஸ்தர் ஸ்ரீமாந். ஹ்யூம் என்பாரே. ஆதியில் பிரஹ்மஞான சபையில் ஒருஅங்கத்தினராக இருந்தனர். இவருடைய மரணத்தை இந்தியர் யாவரும் வியஸநிக்கின்றனர், காங்கிரஸ் மஹாஜந சபை நீடூழிகாலம் இந்தியாவில் நடைபெறும் என்று நம்புகிறோம், அதுபரியந்தம் ஸ்ரீமாந் ஹ்யூம் என்பாரின் ஞாபகம் இந்தியர் ஒவ்வொருவரின் மநத்திலும் நிலைத்திருக்கும் என்பதிற் சந்தேஹமில்லை.

---

ஸ்ரீமாந் வாடியா என்பாரின் உபந்நியாசம் :—நாளிது செப்டம்பர்மீ 19வ சாயங்காலம் 5 மணி 30 நிமிஷத்திற்கு ஸ்ரீமாந் வாடியா என்பார் ஸமயமும், ஸமயபேதங்களும் என்பதைப்பற்றி ஆங்கிலத்தில், மதுரை காலேஜ்ஜில் உபந்நியாசம் செய்வார்கள்.

---

ஜெனரல் பூத் என்பாரின் மரணம்:— உலகமெங்கும் கிறிஸ்துவ இரக்ஷண்யஸேனை (Salvation Army) என்று பேரிகை முழக்கத்துடன் நடைபெறும் ஸபையை இவர் ஸ்தாபித்தார். முதலில் 1865-ம் வருஷத்தில் ஸாதாரண ஜநங்களுக்கு பேரிகை முதலிய வாத்யங்களுடன் கிறிஸ்துமத விஷயங்களைக் கற்றுக்கொடுத்து வந்தார். இந்த சபையின் கூட்டங்கள் பெரும்பான்மையாய் முச்சந்திகளிலும் பஹிரங்கமான வெளிப் பொட்டல்களிலும் பல ஜநங்கள் வந்து கூடும்படியாக நடத்தப்பட்டன. பின்னர்

இந்த சபை விருத்தியாகவே, 1878௵ இராணுவமுறையாக இந்த விருத்தி விவஸ்தைப்படுத்தினர். இந்த இரக்ஷண்யஸேனை என்ற பெயருக்கு ஒற்றுமையாக ஸைந்யத்தின் பல படிகளிலுள்ள உத்யோகஸ்தரின் பெயரை (அதாவது, General, Colonel, Captain, Commander, இவைபோல்வன வைத்து ஸபையின் காரியங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போது சில வருஷங்களாக கிறீஸ்து மத ஸம்பிரதாயங்களை பேரிகை முதலிய ஆரவாரங்களுடன் உபதேசிப்பதுடன் கீழான ஜனங்களுக்குக் கிருஷித் தொழில்களையும் பலவிதமான கைத்தொழில்களையும் இந்த சேனையானது கற்பித்துக்கொண்டு வருகிறது. இந்தியா தேசத்தின் ஒவ்வொரு முக்கியமான பட்டணத்திலும் இதன் கிளைச்சபைகளிருக்கின்றன. கீழான ஜனங்களுக்குக் கைத்தொழில் முதலியவை கற்பித்து வரும் முறையில் இந்த இரக்ஷண்ய ஸைந்யமானது நலம் பயக்கும் ஒரு முக்கியமான ஸாதனமாக இப்போது ஏற்பட்டுவருகின்றது. இந்த இரக்ஷண்ய ஸைந்யத்தில் ஆயிரக்கணக்கான ஆங்கிலர்கள் உழைத்து வருகிறார்கள். இவர்களில் ஸ்திரீகளும் புருஷர்களும் இந்தியர்களைப்போல நடை உடைகளை அநுசரித்துவருகிறார்கள். பட்டுநூல் விருத்திபண்ணும் தொழிலிலும், நெசவுத் தொழிலிலும் முக்கியமாய் இந்தியாவின் வடநாடுகளில் இதனுடைய முயற்சி பெருகிவருகின்றது. ஜெயிலுக்குப்போகும் தீயர்களை நல்வழிப்படுத்தி சரியான மனிதர்களா ஆக்கிவிடுவதாக வடநாடுகளிலுள்ள இந்திய இராஜாங்கத்தாருக்குத் தெரியப்படுத்தி இராஜாங்கத்தாரிடமிருந்து இச்சபையானது சில ஸ்வதந்த்ரங்களையும் பெற்றிருக்கிறது. இந்த சபைக்கு உயிராயிருந்து இதுகாறும் நடத்திவந்தவர் ஸ்ரீமாந் பூத் என்பார். இவர் கீழான ஜனங்களை ஒழுங்கு படுத்தி ஒன்றுசேர்த்து நல்வழிப்படுத்தும் முறையை நன்கறிந்தவர். இம்முயற்சி இவரால் நடைபெற்றகாலத்தில் பலர் அநேகவித ஆக்ஷேபங்களும், ஏளநமும் செய்து வந்தார்கள். அவைகளை இலக்ஷியஞ் செய்யாமல் ஒரே பிடிவாதமாய் இச்சபையை மேன்மேலும் அபிவிருத்தியாகும்படி நடத்திவந்தார். இவர் பொது நலப்பிரியர். இவர் சென்ற ஆகஸ்டு மீ 20 உயில் மரணமாயினர். மரணகாலத்தில் இவருக்கு வயது 83. இவரைப்போல் ஒரே பிடிவாதமுள்ளவராக நற்காரியத்தில் 57 ௵ காலமாக முயற்சித்து தாம் நிருவிய காரியத்தை உலகத்தார் நன்கு மதிக்கும்படியாகச் செய்தவர்கள் வேறு இலரெனச் சொல்லலாம். இத்தகையவரைப்போல் ஒருவர் நம் தேசத்தில் ஹிந்துக்களுக் கேற்படுவாராகில் எவ்வளவோ நலம் உண்டாகும். எல்லாம் ஈசன் செயல்.

பத்திராதிபர்.

42. 𑌕𑌾𑌯𑌾𑌕𑌾𑌶𑌯𑍋𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌸𑌂𑌯𑌮𑌾𑌲𑍍𑌲𑌘𑍁𑌤𑍂𑌲𑌸𑌮𑌾𑌪𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚𑌾𑌕𑌾𑌶𑌗𑌮𑌨𑌮𑍍॥

சரீரத்திற்கும் ஆகாசத்திற்கும் உள்ள சம்பந்தத்தை ஸம்யமம் செய்தலினுல் சரீரத்திற்குப் பஞ்சு போன்று லகுத்துவம் உண்டாகும். அதனுல் ஆகாசகமநசக்தி (யோகிக்கு) ஏற்படும்.

குறிப்பு:—ஆகாசத்தின் குணங்கள் யோகிக்கு உண்டாகும். ஜலத்தில் மிதக்கலாம். ஆகாசத்தில் நிற்கலாம். வாயுவில் ஸஞ்சரிக்கலாம். அக்நி அவனுக்கு ஒருவிதக் கெடுதியும் செய்யாது. சிலந்திப் பூச்சியின் நுண்ணிய இழைநூலில் ஸஞ்சரிக்கலாம். ஸூர்யகிரணங்களில் ஸஞ்சரிக்கலாம். அவன் போக்குக்கு எங்கும் தங்கு தடையில்லை.

43. 𑌬𑌹𑌿𑌰𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌵𑌿𑌦𑍇𑌹𑌾 𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌵𑌰𑌣𑌕𑍍𑌷𑌯𑌃॥

வெளியிலுள்ள விஷயங்களால் கற்பிக்கப்படாத மனோ விர்த்திக்கு "மஹாவிதேஹா" என்று பெயர். அந்த நிலைமையை அடைவதினுல் பிரகாசத்திற்குத் தடையாயுள்ள ஆவரணத்தின் க்ஷயம் ஏற்படுகிறது.

குறிப்பு:—முன் வெளியிலிருக்கின்ற விஷயங்களைப் பற்றி யுண்டாகும் மனோவிர்த்திகளில் ஸம்யமம்செய்தல்சொல்லப்பட்டது. அவ்விர்த்திகளுக்கு 'கல்பிதம்' என்று பெயர். வெளிவிஷயங்கள் சம்பந்தமின்றி மநஸ் தன் ஸ்வரூபத்தில் இருப்பதானது 'அகல்பிதம்' என்றழைக்கப்படுகிறது. அதை "மஹாவிதேஹா" என்று சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வெளியில் பிரவிர்த்தி இல்லை. புருஷ தர்சநமும் உண்டாகவில்லை. ஸாக்ஷாத்தியும் இல்லை. இவ்விதம் இல்லாமல் மநத்திற்கு ஒரு நிலை உண்டு. அஃது இந்த சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. கட்டுக்குட்பட்ட இந்த சரீரத்தினின்று இயங்கும் மநஸ் இந்தக் கட்டைவிட்டு வெளியேறி ஸர்வவியாபியாகி எங்கும் நிறைக்கும் தன்மை உண்டாகும் நிலை இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்நிலையில் பரகாயப் பிரவேசம் செய்யலாம். துக்கம், கர்மம், அக்ஞாநம் இவை நீங்கும். புத்தியில் உயர்நலம் உண்டாகும். பிரகாசம் உண்டாகும். மலபரிபாகம் என்று சைவ

வித்தாந்திகள் சொல்லுவது இங்கே கவனிக்கத்தக்கது. தமோ குணம் ரஜோகுணம் இரண்டும் அற்று ஸத்வகுணநிலையில் மநஸ் இருக்கின்ற ஸ்திதிதான் இச்சூத்திரத்தில் விவரிக்கப்படும் "மஹா விதேஹா" என்பது. இந்நிலையிற் செய்யும் பரகாயப்பிரவேசம் முன் 38-வது சூத்திரத்தில் சொல்லியபடி ஸாதநங்களின்றி நினைத்த மாத்திரத்தில் நிகழும். இந்நிலையில் யோகி ஸத்யகாமனுகவும், ஸத்யஸங்கல்பனுகவும் ஆகிறுன்.

44. ஸ்தூலஸ்வரூபஸூக்ஷ்மாந்வயார்த்த
வத்த்வஸம்யமாத் பூதஜய:

வஸ்துக்களின் ஸ்தூலமான வெளித்தோற்றம், யதார்த்த ஸ்வரூபம், ஸூக்ஷ்மமான நிலைமை, அந்வயம், அர்த்தவத்வம் இந்த 5 தன்மைகளை ஸம்யமம் செய்தலினுல் பூதஜயம் உண்டாகும்.

குறிப்பு:—அடிக்கடி மாருத தன் நிலைமை யென்பது யதார்த்த ஸ்வரூபம். அதாவது தங்கமும் நகையும் போல. ப்ருதிவிக்குக் கடினத் தன்மையும், அப்புவிற்கு நெகிழ்ச்சியான தன்மையும், தேஜஸ்ஸுக்கு உஷ்ணமும், வாயுவுக்குச் சலநமும், ஆகாசத்திற்கு எங்கும் பரவியிருத்தலும் தனித்தனி அதததன் ஸ்வரூபம் என்று பெயர். ஸூக்ஷ்ம நிலைமை=தந்மாத்ரை. அந்வயம் = எல்லாப் பதார்த்தங்களிலும் ஊடுருவிப்பாய்ந்து இருக்கின்றவை. அவையாவன ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுமாம். அர்த்தவத்வம் =குணங்களின் சக்தி, போகம், அபவர்க்கங் (மோக்ஷம்)களைக் கொடுக்கும் தன்மை. குணங்கள் ஒவ்வொரு வஸ்துவினிடமுமிருக்கின்றமையால் மேற்படி தன்மை ஒவ்வொரு வஸ்துவினிடமும் உள்ளது. முன்னே இந்த பாதம் 13-ம் சூத்திரத்தில் தர்மம், லக்ஷணம், அவஸ்தை என்ற பரிணமங்களைச் சொல்லி, பரிணமமில்லாத நிலைமையை அறியும் முறை சொல்லப்பட்டது. இந்த சூத்திரத்தில் உலகத்தில் தோன்றும் விஷயங்களின் உண்மையை அறியும்படி 5 தன்மைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பூதஜயம் பெற்ற யோகியின் சங்கற்பத்தை அநுஸரித்து எல்லா பூதங்களும், பசு தன் கன்றை அநுஸரிப்பது போல, நடைபெறுகின்றன.

45. 𑌤𑌤𑍋𑌽𑌣𑌿𑌮𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍁𑌰𑍍𑌭𑌾𑌵𑌃
𑌕𑌾𑌯𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌤𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑌭𑌿𑌘𑌾𑌤𑌶𑍍𑌚॥

அதனால் (பூத ஜயத்தினால்) அணிமாதி ஸித்திகளும். காயஸம்பத்தும் உண்டாகின்றன. ப்ருதிவியாதி பூதங்களின் அதநன் தர்மங்களினால் நிகழும் தடைகள் அற்ற நிலைமையை யோகி பெறுகிறான்.

குறிப்பு:— அணுவாகும் தன்மை (அணிமா), இலேசாகும் தன்மை (லகிமா), பெரிதாகும் தன்மை (மஹிமா), கனமாகும் தன்மை (கிரிமா), தூரத்திலிருக்கின்ற வஸ்துவை அணுகும் தன்மை (பிராப்தி), கர்மங்களுக்குத் தடையின்றிருத்தல் (பிராகாம்யம்), பிராணிகளை ஸ்ருஷ்டித்தல்(ஈசத்துவம்),எல்லாவற்றையும் ஸ்வாதீனப் படுத்தல் (வசித்துவம்) இத்தகைய சக்திகள் இருந்தும் உண்மையான யோகிகள் இவைகளை வீணாச் செய்யமாட்டார்கள். பூதங்களின் தர்மங்களால் தடைகளில்லை. என்றால் பூமிக்குள் நுழையலாம், ஜலத்தில் உட்காரலாம், ஆகாசத்தில் நிற்கலாம், தன்னை ஆகாசமுங்கூட மறைக்கும்படியாகச் செய்துகொள்ளலாம்.

46. 𑌰𑍂𑌪𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌬𑌲𑌵𑌜𑍍𑌰𑌸𑌂𑌹𑌨𑌨𑌤𑍍𑌵𑌾𑌨𑌿 𑌕𑌾𑌯𑌸𑌂-
𑌪𑌤𑍍॥

காயஸம்பத் என்றால் அழகு, லாவண்யம், பலம், வைரம்போன்ற உறுதி என்பனவாம்.

47. 𑌗𑍍𑌰𑌹𑌣𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑍍𑌵𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌯𑌮𑌾
𑌦𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌜𑌯𑌃॥

கிரஹணம், ஸ்வரூபம், அஸ்மிதை, அந்வயம், அர்த்தவத்வம் இவைகளில் ஸம்யமம் செய்வதினால் இந்த்ரிய ஜயம் உண்டாகும்.

குறிப்பு:—கிரஹணம்=சப்தாதி விஷயங்களை கிரஹித்தல், இந்த்ரிய பிரவிர்த்தி (Sensation). இது இருவிதம்: ஸாமாந்யம், விசேஷம். ஸ்வரூபம்=இந்த்ரியங்கள் ஸாத்விக அஹங்காரத்தினின்று உண்டாயின; இந்த்ரியங்கள் உண்டான அந்நிலை, பிரகாசத் தன்மையுள்ள ஸாத்விக அகங்காரத்தினின்று உற்பவித்த தத்ஸமயத்தின் நிலைமை. அஸ்மிதை=அந்த அஹங்காரம். அந்வயம்=அவ்வகங்காரம் எதினின்று உண்டானதோ அந்த ஸத்வ ரஜஸ் தமோ

குணங்களுள்ள மஹாந்தத்துவம். அர்த்தவத்வம்=போகாபவர்க்கங்கள்.

(1) இந்த்ரியங்கள் விஷயங்களை கிரஹிக்கும் நிலை, (2) இந்த்ரியங்களின் நிர்மலமான ஸ்வரூபம், (3) இந்த்ரியங்களுக்குக் காரணமான ஸாத்விக அஹங்காரமான அஸ்மிதை, (4) மேற்கண்டவைகளில் அநுஸரித்திருக்கின்ற மூன்றுகுணங்கள் (ஸாத்விகம், ராஜஸம், தாமஸம்.)(5) இக்குணங்களிலிருக்கின்ற போகாபவர்க்கங்களை உண்டு பண்ணும் சக்தி ஆகிய இவைகள் ஒன்றின் பின் ஒன்றாய் உண்டான பரிணமங்கள். இவைகளின்மேல் ஸம்யமம் செய்தலினால் இந்த்ரிய ஜயம் உண்டாகிறது. இந்த்ரியங்கள் அததன் பிரவிர்த்தியின்றியும், லயமின்றியும் தத்தம் நிலையில் இருப்பதை யோகி செய்துகொள்ளுவானாகில் அப்போது ஒருவித ஆநந்தம் ஜநிக்கும். அதற்கு "ஸாநந்தம்" என்று பெயர்.

48. ததோ மநோஜவித்வம் விகரணபாவ:
ப்ரதாநஜயஶ்ச ॥

அதனால் (இந்த்ரிய ஜயத்தினால்) மநோவேகம் போன்ற வேகத்தை யோகியின் சரீரம் பெறுகிறது. சரீரத்தின் சலநமில்லாமலே அதன் உதவியின்றியே (எல்லா தேசங்களிலும், காலங்களிலும் உண்டாதும், எல்லா விஷயங்களையும் உள்ளபடி) இந்த்ரியங்களுக்கு கிரஹிக்கும் சக்தியுண்டாகிறது. பிரதாந ஜயம் உண்டாகிறது.

குறிப்பு:—பூதஜயம், அதனால் இந்த்ரிய ஜயம், அதனால் பிரதாநஜயம் இம்மூன்று ஸித்திகளும் சேர்ந்து மது பிரதீகா என்று சொல்லப்படுகிறது. இந்த நிலையில் யோகியானவன் ரிதம்பரா பிரக்ஞையை உடையவனாகிறான்.

49. ஸத்வபுருஷாந்யதாக்யாதிமாத்ரஸ்ய ஸர்வபாவாதிஷ்டாத்ருத்வம் ஸர்வஜ்ஞாத்ருத்வம் ச ॥

ஸத்வம் வேறு, புருஷன் வேறு என்று நிச்சயமாக அறிந்திருக்கிற யோகிக்கு எல்லா வஸ்துக்களுக்கும் அதிபதியாகவிருக்கும் தன்மையும் எல்லா வஸ்துக்களையும் அறியும் சக்தியும் உண்டாகின்றன.

குறிப்பு:—ஸத்துவம்(ரஜோகுணம், தமோகுணமில்லாத நிலைமையில் புத்தியானது சுத்த ஸத்துவகுண ஸம்பந்தியாக இருக்கிற

புத்தி தத்தவம்) புருஷன் இவையிரண்டும் அவிவேகத்தினல் ஸாதாரண ஜநங்களுக்கு அபேதமாகக் காணப்படுகின்றன. இவையிரண்டையும் வேறென்று யோகி அறிகிருன்.

எல்லா வஸ்துக்களையும் ஸ்வாதிநமாக வைத்துக்கொள்ளும் தகைமையும்(ஆதிபத்யமும்) ஸர்வக்ஞாத சக்தியும் உண்டாகின்றன. இந்த ஸித்திக்கு "விசோகம்" என்று பெயர். எப்போதும் எந்நிலையிலும் வியஸநமற்ற நிலைமையையுடையவனுக ஆகிருன். விருப்பு வெறுப்பற்றவனுக இருக்கின்ருன்.

50. 𑌤𑌦𑍍𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌾𑌦𑌪𑌿 𑌦𑍋𑌷𑌬𑍀𑌜𑌕𑍍𑌷𑌯𑍇
𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌮𑍍 ॥

(முன் பிரஸ்தாபித்த விசோகம் என்ற ஸித்தியில்) வைராக்யத்தைப் பெறுதிவனல் தோஷங்களுக்கும் அவைகளின் காரணமான பூர்வகர்மம், அவித்யை முதலானவைகளுக்கும் நாசம் உண்டாகும். அதன் பிறகு யோகி கைவல்யத்தைப் பெறுகிறன்.

குறிப்பு:—(1) பூதஜயம், இந்த்ரிய ஜயம், பிரகிருதிஜயம் ஆகிய இவை மூன்று ஸித்திகள்.

(2) தோஷங்கள்—கிலேசங்கள், அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம்.

(3) பீஜம்—பூர்வகர்ம ஸம்ஸ்காரங்கள், அவித்யை.

(4) கைவல்யம்—ஸாத்விக, ராஜஸ, தாமஸ குணங்களினின்று விலகித் தனிப்பட இருத்தல், இதுவே அமநஸ்க நிலை. மநம் அற்ற ஸ்தாநம். இந்த ஸித்திக்கு ஸம்ஸ்கார சேஷம் என்று பெயர்.

(5) ஈசுவரனுக்கும் இந்நிலைபெற்ற யோகியான புருஷனுக்கும் இருக்கும் பேதம் என்னவென்ருல், ஈசுவரன் குணங்கள் மூலமாய் நிமித்த காரணனுயிருந்துகொண்டு ஸ்ருஷ்டி ஸ்திதி முதலிய கிருத்யங்களைச் செய்துகொண்டுவருகிருர். யோகியான புருஷன் அவர் ஆளுகையினின்று விலகி ஸ்வாராஜ்யம் பெறுகிருன்.

51. 𑌸𑍍𑌥𑌾𑌨𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌣𑍇 𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌮𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌪𑍁𑌨𑌰𑌨𑌿𑌷𑍍𑌟𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 ॥

தேவர்களால் அழைக்கப்படும் காலத்தில் பிரியத்தையும் கர்வத்தையும் கொள்ளற்க. திரும்பவும் அநிஷ்டங்கள் உண்டாகின்றமையால்.

குறிப்பு:—யோகிகள் 4 படியில் உள்ளவர்கள்:—(1) பிரதமகல்பிகர் (2) மதுபூமிகர் (3) பிரக்ஞாஜ்யோதிஸ் (4) அதிக்ராந்த பாவநீயர்.

பிரதமகல்பிகர்:—இவர் அப்பியாஸி, யோகத்தில் புகுந்தவர். ஸம்யமத்தில் ஆரம்பித்தவர். ஆனால் ஒரு ஸித்தியும் பெறாதவர்.

மதுபூமிகர்:— மதுமதி என்ற ரிதம்பரா பிரக்ஞாநிலையில் இருக்கின்றவர். பூத ஜயம், இந்த்ரிய ஜயம் பெற முயன்று, அவைகளை ஸாக்ஷாத்கரித்து ஜயித்தவர். மதுபிரதீக, விசோக, ஸம்ஸ்கார சேஷம் என்ற மூன்று பூமிகளை அடையமுயலுகின்றவர்.

பிரக்ஞாஜ்யோதிஸ்:—பூத ஜயம், இந்த்ரியஜயம் பெற்றதினால் தேவர்களால் எவ்வித சலநத்திற்குமுட்படுத்தப்படாதவன், மதுமதி, மதுபிரதீக என்ற பூமிகளை அடைந்தவன், விசோக, ஸம்ஸ்கார சேஷம் என்ற பூமிகளை புருஷஸாக்ஷாத்காரம் பெறுவதற்காக அடையும்படி (சித்திகள் பெற அன்று) ஸம்யமம் செய்கிறவன்.

அதிக்ராந்தபாவநீயர்:—மதுபூமிகா, மது பிரதிகா, விசோகா என்ற மூன்று பூமிகளையடைந்த ஜீவன்முக்தன்; கைவல்யத்தையடைந்தவன். 2-ம் பாதம், 27-ம் சூத்திரத்தில் இவனைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறது.

இவர்களில் இரண்டாவது படி ஏறியவனுக்கே இந்தசூத்திரத்தில் சொல்லிய அபாயம் நேரிடும். தேவர்கள், இவன் மேலேறாமல் பல மயக்கங்களான உலக விஷயங்களினால் இவனை இழுப்பார்கள்.* பல ஆசைகள் வந்து பீடிக்கும். தன்னை தேவர்கள் வந்து கூப்பிடும்படியான தகைமை தனக்குண்டாயிருக்கிறதென்று அகம்பாவமும் கருவமும் கொள்ளுவான். அப்படி யேற்படுமாகில் யோக முயற்சி தளரும், குறையும், சோர்வு உண்டாகும். இந்தப்

* கடோபநிஷத்தின் முதலாம் வல்லியில் நசிகேதஸ்ஸை, யமதேவர் பலவித மயக்கங்களுக் குட்படுத்த முயலுகிறது இங்கு கவனிக்கத்தக்கது.

படியினின்று நழுவும்படியான நிலைமை உண்டாகும். அதை நோக்கியே எச்சரிக்கையாய் இருக்கும்படி இந்த சூத்திரம் உபதேசிக்கிறது. அப்படித் தளருவானாகில் எவ்வளவோ கஷ்டப்பட்டு அடைந்த, இந்த மாயா உலகவாழ்வை விட்டு உயர்நலமமைந்த ஞானத்தை உள்ளபடி அறியும் நிலைமையினின்று கீழே விழுவான். உலகக் களேபரத்தில் மறுபடியும் அழுந்துவான். அதில் மூழ்குவான். இம்மயக்கங்களுக்கு உள்ளாகாமல் நேரே படியேறி மேல் நோக்குகின்றவனே கைவல்யம் பெறுவான்.

52. க்ஷணதத்க்ரமயோ: ஸம்யமாத் விவேகஜம் ஜ்ஞாநம் ॥

க்ஷணத்தையும் அதன் கிரமத்தையும் ஸம்யமம் செய்தலினால் விவேகஞானம் உண்டாகும்.

குறிப்பு:—க்ஷணம் = காலத்தின் பரம அணு. அதாவது அதற்குமேல் பகுக்கக் கூடாதது. கிரமம் = வரிசை, அந்த க்ஷணம் ஒன்றின்பின் ஒன்றாய் நிகழும் தொடர்பு. பதார்த்தங்களைப் பிரித்துகொண்டே போக கடைமுறையில் பரம அணு மிஞ்சும். 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து ஒன்றாம்''. அது போலக் காலத்தைப் பிரித்துக்கொண்டே போகக் கடை முறையில் க்ஷணம் மிஞ்சும். அதைப் பிரிக்க இயலாது. ஒரு பரம அணு சென்று அடுத்த பரம அணு ஆரம்பிக்கிற வரையுள்ள காலத்திற்கு க்ஷணமென்று பெயர். அந்த க்ஷணங்களுடைய பிரவாஹத்திற்குக் கிரமம் என்று பெயர். பரம அணுக்களைத் தவிர உண்மையில் வேறாக வஸ்துக்களும், க்ஷணத்தைத் தவிர வேறாக மாதம், திநம் முதலான காலங்களும் இல்லை. அவைகள் நம்முடைய புத்தியில் ஏற்படும் தோற்றங்கள். காலம் (மாஸம் முதலியன) பிரத்யேகமான வெளிப்படையான வஸ்து அன்று, (no entity). அவை புத்தியின் கற்பிதம். ஸாதாரண ஜனங்கள் பஹிர்முக நோக்கானவர்களாகையால் அவைகளை (மாஸம், திநம் முதலியவற்றை) வஸ்துக்களாக கிரஹிக்கிறார்கள். க்ஷணம் ஒன்றே வாஸ்தவம். அது எப்பொழுதும் தொடர்பாய் நிகழ்கிறது. இதைத் தான் காலத்தின் தத்துவத்தை அறிந்தவர்கள் காலம் என்று சொல்லுகிறார்கள். இரண்டு க்ஷணங்கள் ஒன்று சேர்ந்து நிகழா. இடைவெளி உண்டு.

வஸ்துக்களின் இடைவெளியும் காலத்தின் இடைவெளியும் இருக்கின்றன. அவை அதிக ஸூக்ஷ்மமாக நிகழ்கின்றமையால் இடைவெளிகள் இல்லை போலத் தோன்றுகின்றன; வாஸ்தவத்தில் உள்ளன. வர்த்தமான க்ஷணம் நிகழ் காலம் மாத்திரம் உண்மை, சென்ற காலமும், வருங்காலமும வாஸ்தவமில்லை. ஒவ்வொரு க்ஷணத்திலும் பரம அணுக்களின் சலநங்கள் ஏற்படுகின்றன. அவைகளால் நாநாவித பரிணமங்கள் உண்டாகின்றன. உலகமுழுவதும் கொஞ்சம் கொஞ்சமாகப் பரிணமங்களையடைகின்றது ஜகத்திலுள்ள எல்லா வஸ்துக்களின் தர்மங்களும் க்ஷணத்தை அநுஸரித்திருக்கின்றன. அதின் மேல் அளவுகள் ஆரோபமாகவிருக்கின்றன. விவேகஞாநம்: பிரகிருதி புருஷவிவேகம்.

53. ஜாதிலக்ஷணதேசைரந்யதா
நவச்சேதாத் துல்யயோஸ்ததः ப்ரதிபத்திः ॥

ஜாதி, லக்ஷணம், தேசம் இவைகளினல் வேறு வேறாக அறிய முடியாத வஸ்துக்களையும், முன் சொன்ன ஸம்யமத்தினல் வேறு வேறாக அறிதல் யோகிக்கு ஏற்படும்.

குறிப்பு:—ஜாதி, லக்ஷணம், தேசம் இவை மூன்றினல் தான் வஸ்துக்களை வேறு வேறாக அறிகின்றோம். ஸூக்ஷ்மமான ஸ்திதியில் இந்த சாதநம் உபயோகமில்லாமல் போகும். அந்நிலையில் யோகி முன் சொன்ன ஸம்யமத்தினல் வஸ்துக்களின் வேற்றுமை ஞாநத்தை அறிகிறான். ஸ்தூலமான வித்யாஸங்களும் ஸூக்ஷ்மமான வித்யாஸங்களும் யோகிக்குத் தெரியவரும்.

54. தாரகம் ஸர்வவிஷயம் ஸர்வதாவிஷயமக்ரமஞ்சேதி
விவேகஜம் ஜ்ஞாநம் ॥

விவேகத்தினல் உண்டான ஞாநம் தாரகம் என்று பெயர். இந்த ஞாநம் எல்லாவிஷயங்களையும் எல்லாக் காலங்களிலும் ஒரே சமயத்தில் (யோகி இருக்கிற பிரகாரம்) அறியும் தகைமை உண்டாகிறது.

குறிப்பு:—தாரகம் என்பதாவது ஸம்ஸாரமேற்றிவைக்கும் ஞாநம். மோக்ஷத்திற்குக் கொண்டுபோகும் இயல்பினது. மதுமதி முதல் ஆரம்பிக்கிற யோகப் பிரபையானது இந்த ஞாநத்தின் ஒருபாகம்.

பல கண்காக்ஷிகளில்
மேடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

---

# பி. சுப்பராய், ஆயுர்வேத

## ஔஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து

இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

6. **சுகந்த கூந்தல் தைலம்:**—இத்தைலத்தால் தலைமயிர், மீசை கண் இமை வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும், வளரும். கண்களைக் குளிரச்செய்யும். சகல கண்நோய்களும், தலை நோய்களும் நீங்கும். செம்பட்டைமயிர் கருக்கும். மயிர் உதிராமல் காக்கும். கண்களுக்கு பிரகாசத்தை தரும். விலை புட்டி 1-க்கு அணா 8, வி. பி. செலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7. **நேத்திர பிந்து:**—கண்ணோய், கண் குத்தல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை, புருவம், இவைகளின் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடிபோட வேண்டியது அனாவசியம். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. **கர்ணபிந்து:**—காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளை குணமாக்கும். செவி நன்றாய்க் கேட்கும். சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. **சர்வபடை சம்ஹாரன்:**—இடுப்பு, தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி, ஓயாத நமச்சலைத்தந்து, வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும், மேகப்படை, சொறி, சிரங்கு, தமிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. செலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

---

என்னுடைய ஔஷத சாலையின் ஹெட் ஆபீஸை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும் இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட். சாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

ஸ்ரீ ராமஜயம்.

## ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்,

### தமிழ்வசனம்.

திருச்சினப்பள்ளி. எஸ். பி. ஜி. காலேஜ் லெக்சரர்,

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ.

அவர்களால் ஸுலபமான நடையில் மூலத்திற்கு ஸரியாய் மொழி பெயர்க்கப்பட்டது.

நேர்த்தியான கடிதத்தில் தெளிவான எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஏழு காண்டங்களும் ஸுமார் 3500 பக்கங்களில் 16 பாகங்களாக வெளியிடப்பட்டு, 4 வால்யூம்களாய், உயர்ந்த கலிக்கோ கில்ட் பைண்ட் செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றன.

ஸெட்டின் விலை ரூ. 23—0—0. (தபால் சார்ஜ் வேறு)

### இங்கிலீஷ் வசனம்.

3 பாகங்கள் வெளியாயிருக்கின்றன. பாக்கி 13 பாகங்கள் இரண்டு மாஸத்திற்கு ஒருதரம் வெளிவரும்.

ஒவ்வொரு பாகத்தின் விலை ரூ. 1—8—0. (தபால் சார்ஜ் வேறு.)

## ஸாவித்ரீ சரித்ரம்.

(பதிவ்ரதாமஹாத்ம்யம்)

ஸ்ரீமன் மஹாபாரதத்திலிருந்து, மொழிபெயர்க்கப்பட்டது. விலை அணு 4.

கெ. 27 செட்டைமால் தெரு, திருச்சினப்பள்ளி. } ஸ்ரீ நிவாஸராகவையங்கார்.

---

## பெண் கல்வி.

### சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம் வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவைகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலியவற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்குவிஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளே யாவர்.

☞ இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாகப் பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0 தனிப்பிரதி 0-4-0 மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணு ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

சகோதரி ரேவு தாயாரம்மா,

பத்திராதிபர். பெண்கல்வி. சென்னை.